# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 32 திங்கட்கிழமை (16-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:265


## மடு உற்சவத்தில் மக்கள் வெள்ளம்

மடு,ஓக.16

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மடுமாதா தேவாலயத்தில் நேற்று நடந்த பெருந்திரு விழாத் திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகிய வற்றில் சுமார் 3 லட்சம் பக்தர்கள் இன, மத வேறுபாடின்றி உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர்.

மடு தேவாலயத்தின் உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்றுக் காலை 7 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமானபோது யாழ் மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், இரத் தினபுரி மறைமாவட்ட ஆயர் மல்கம் றஞ்சித், மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் ஆகியோர் கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)



மடு உற்சவத்தில் கலந்துகொண்ட மக்களையும் திருச்சொரூப பவனியையும் படங்களில் காணலாம். (படங்கள் : வவுனியா செய்தியாளர்)

# கூட்டமைப்புக் குழப்பத்தைச் சமாளிக்க

# தேர்தலுக்குத் தயாராகிறார் ஜனாதிபதி

## பெரும்பான்மைப் பலத்தோடு மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது அவரின் திட்டம்

கொழும்பு,ஓகஸ்ட்16

**தமது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசைக் கொண்டிழுக்க முடியாமல் அல்லல்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நெருக்கடிகளைச் சமாளிக்க வேறுவழியின்றி மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுப்பது குறித்துத் தீவிரமாக ஆலோசிக்கிறார் என்றும் அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து வருகின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

இன்றைய நிலையில் தனது கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தாளத்துக்கு அமைய அரசை நடத்திச் செல்வது இயலாத காரியம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுகிறார்.

அதேசமயம், தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை இல்லாத நிலையில் ஆட்சியைக் கொண்டிழுக்க முடியாது.

அத்தோடு நாடாளுமன்றத்தில் தெளிவான அறுதிப்பெரும்பான்மை இல்லாத நிலையில்

(02ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ், நெதர்லாந்து தூதர்கள் கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி,ஓக.16

வெளிநாடுகளின் தூதர்கள் மூவர் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கின்றனர்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் ஸ்ரீபன் இவன்ஸ், இலங்கைக்கான நெதர்லாந்து நாட்டின் தூதர் திருமதி சுஸன் பிளாஸ்கட் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையகத்தைச் சேர்ந்த வூட்டர் வில்சன் ஆகிய மூவருமே இன்று ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சிக்கு வருகின்றனர்.

முற்பகல் 11 மணிக்கு இவர்கள் அரசியல் துறைப் பணிமனையில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகத் தூதர்கள் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவர்.

(ஐ)

## தமிழ்ச்செல்வனுடன் ஆயர்குழு கிளிநொச்சியில் நேற்றுப் பேச்சு

கிளிநொச்சி,ஓக.16

பரிசுத்த பாப்பரசரின் இந்தோனேஷியப் பிரதிநிதி அதிமேற்றிராணியார் வண. மல்கம் றஞ்சித், யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான நகர்வில் தற்போதைய நிலைவரம் குறித்தும் -

விடுதலைப் புலிகளின் சமாதான நிலைப்பாடு தொடர்பாகவும் பேச்சுக்களின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்த வண. மல்கல் றஞ்சித் -

புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது அவர்களின் தற்போதைய நிலைப்பாடு குறித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஈழத் தமிழர்களின் நிலை குறித்து வெளி நாடுகளுக்கு எடுத்துக்கூற இந்தச் சந்திப்பு பேருதவியாக அமைந்தது.

- என்று கூறினார்.

(எ-9)

## கருணா ஆட்டம் முடிந்தது! வெளிநாட்டுக்கு ஓட்டம்!!

### இராணுவ ஆய்வாளர் பரபரப்புத் தகவல்

விடுதலைப் புலிகளின் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா குறித்து பரபரப்புத் தகவல்களை பிரபல இராணுவ விமர்சகரான இக்பால் அத்தாஸ் 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய தனது வாராந்தக் கட்டுரையில் வெளியிட்டிருக்கின்றார்.

பிந்திய 'சண்டே ரைம்ஸ்' இதழை கருணா வாசிக்கும் புகைப்படமும் மீசையின்றி கருணாவின் தற்போதைய தோற்றமும் அவரது கட்டுரையுடன் பிரசுரமாகியிருந்தன.

அந்தக் கட்டுரையின்படி -

கருணாவின் ஆட்டம் ஓய்ந்தது. ஆயுதங்களோ உதவியாள்களோ இன்றி வெறுங்கை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் பணிக்குச் சென்ற புலிகள் உவர்மலையில் நேற்றுத் தடுத்துவைப்பு

திருகோணமலை,ஓக.16

திருகோணமலை மாவட்டத்தில் உவர் மலைப் பகுதிக்கு நேற்று மாலை 5 மணிக்கு அரசியல் பணிக்காகச் சென்ற 7 போராளிகளை சுற்றிவளைத்த நூற்றுக்கு மேற்பட்ட படையினர் ஒருமணி நேரம் அவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

மூன்று பெண் போராளிகளும் நான்கு ஆண் போராளிகளும் அரசியல் பணிக்காக அவ்விடத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு 'பீல்ட் பைக்கு'களில் வந்த படையினர் அவர்களைச் சுற்றி வளைத்தனர். அதன் பின்னர் ஜீப்புகளில் அங்கு வந்த நூற்றுக்கணக்கான படையினரும் அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் நேற்று 75ஆயிரம் பேர் பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்

வலி.வடக்கு,ஓக.16

ஆடி அமாவாசை விரத நாளான நேற்று கீரிமலையில் சுமார் 75ஆயிரம் பேர் கூடி பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகியவற்றின் மூர்த்திகள் கீரிமலையில் எழுந்தருளி தீர்த்தமாடியதை அடுத்து அங்கு கூடிய அடியார்கள் தீர்த்தமாடி தமது மூதாதையர் நினைவாகப் பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

தெல்லிப்பழை, சேந்தாங்குளம் முன்னரங்க நிலைகள் ஊடாக வாகனங்களும், மோட்டார் சைக்கிள்களும், வடபிராந்திய போக்குவரத்துச்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் பங்குபற்றிய நிகழ்வில் கலந்துகொண்ட

## தமிழ்ப் பெண் பொறியியலாளர்கள் பொலீஸாரினால் தீவிர சோதனை

யாழ்ப்பாணம்,ஓக.16

கட்டட நிர்மாணத்துறை சம்பந்தமான கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த தமிழ்ப்பெண் பொறியியலாளர்கள் இருவர் பொலீஸாரினால் தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பெண் பொறியியலாளர் ஒருவரும் திருமலையைச் சேர்ந்த பெண் பொறியியலாளர் ஒருவருமே தடுத்துவைக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

கட்டடத் தொழில்துறை நிறுவனங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த கட்டடத்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சிங்களத் தீவுக்குப் பாலம் அமைக்கும் பாரதியின் கனவு இன்று நனவாகியுள்ளது

## சுதந்திரதின நிகழ்வில் இந்தியத் தூதர்

கொழும்பு,ஓக.16

சிங்களத் தீவுக்குப் பாலம் அமைத்து உற வாடச் சொன்னார் பாரதி. இன்று நாம் இலங் கையுடன் நட்பு ரீதியில் பல உறவுப் பாலங் களை அமைத்துக் கைகோர்த்துள்ளோம். அன் றைய பாரதியின் கனவு இன்று நனவாகியுள்ளது.

- இப்படிக் கூறினார் இந்தியத் தூதுவர் நிருபம் சென். இந்திய சுதந்திர தினத்தை யொட்டி நேற்றுக் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் விசேட வைபவமொன்று நடை பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தூதுவர் நிருபம் சென் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு இந்தியா பல்வேறு வகை யிலும் ஒரு தோழனாக இருந்து உதவி செய்து வருகின்றது. பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இந்த உதவி கள் அமைந்துள்ளன.

இந்தியா வன்முறையற்ற ஒரு போராட் டத்தை மதிக்கின்றது. அண்ணல் காந்தி இந் திய நாட்டின் விடுதலைக்காக வன்முறையற்ற - ஜனநாயக ரீதியிலான - போராட்டங்களை நடத்தினார். அந்தப் போராட்டங்களின் மூலம் பெரும் சாதனைகளை அவர் நிலைநாட்டினார். பாரத நாடு விடுதலை பெற அகிம்சை என்ற ஆயுதத்தைக் கையில் ஏந்திப் போராடியது.

நான் இலங்கையில் இந்திய சுதந்திர தினம் பற்றி ஆற்றும் இறுதி உரை இதுவாகும். 1989ஆம் ஆண்டு நான் இலங்கையில் பிரதி இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிய காலத் தில் நாடு பெரும் நெருக்கடிக்குள் இருந்தது. எங்கு பார்த்தாலும் கலவர நிலை காணப்பட்டது. இன்றும் ஆங்காங்கே பிரச்சினைகள் உள் ளன. இதுபோன்ற சூழ்நிலை பொருளாதாரத் துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். கடந்த காலத்தில் இலங்கையில் வெள்ளம் ஏற்பட்ட போதே இந்தியா தன்னால் இயன்ற உதவி களை வழங்கியது. வடக்கு, கிழக்குப் பகுதி களின் அபிவிருத்திக்கு உதவி செய்திருக்கி றோம்.

பாரதி கண்ட கனவு இன்று சேது சமுத்தி ரம் என்ற திட்டத்தோடு உருப்பெறுகிறது. இரண்டு நாடுகளும் நில ரீதியாக இணையும் காலம் தூரத்திலில்லை.

இருநாட்டு மக்களினதும் சிறந்த எதிர் காலத்துக்கான திட்டங்களை வகுத்தே நாம் செயற்படுகிறோம். சுற்றுலாத்துறையில் இரு நாடுகளும் நல்ல வளர்ச்சியினைக் கண்டுள் ளன. தொழில்நுட்ப ரீதியிலும் மேலும் வளர்ச்சி காணப்படல்வேண்டும்.

இலங்கை - இந்திய உறவுகள் சிறப்பாகப் பேணப்படல் வேண்டும் என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கிறோம். வியாபார ரீதியான பல ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம். இரு நாடுகளின் உறவுகள் தொடர்ந்தும் நட்பு ரீதியாகக் கட்டியெழுப்பப்படவேண்டும் என் பதே எமது அவாவாகும் - என அவர் மேலும் கூறினார். (க)

## ஹர்த்தால் அழைப்பால் கல்குடாவில் பரபரப்பு!

கொழும்பு,ஓக.16

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக மட்டக்களப்பு, கல்குடாத் தொகுதிகளின் சில பகுதிகளில் நேற்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட் டிருந்தது. அதனால் பரபரப்பும், பதற்றமும் நிலவியது. ஆனால், அந்த ஹர்த்தால் அழைப்பு பிசுபிசுத்துப்போய்விட்டது என ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கல்குடா மற்றும் ஓட்டமாவடிப் பகுதிகளுக்கு வருகை தருவதை ஒட்டியே இத்தகைய ஹர்த் தாலுக்கு முஸ்லிம் அமைப்பு ஒன்று அழைப்பு விடுத்திருந்தது. சில இடங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் ஆங்காங்கே பறந்தன. எனினும் போக்குவரத்து வழமைபோல நடந்தது.

ஹக்கீமின் வருகையை ஒட்டி அவரது அணியினருடன் வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை, செம்மனோடை ஆகிய பகுதிகள் ஊடாக வாகனத் தொடரணியிலும், ஊர்வல மாகவும் பல நூற்றுக்கணக்கானோர் ஊர்வ லமாகச் சென்றனர். ஹர்த்தால் அழைப்பு, இந்த ஊர்வலப் பவனியால் பிசுபிசுத்துப்போனது என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித் தன. (க)

## விலை அதிகரிப்புகள் இந்த வாரத்தில் வரிசையாக வரும்!

பொருள்களின் விலை அதிகரிப்புப் பற்றி பல திடீர் அறிவிப்புகள் இவ்வாரத்தில் வெளி வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பால்மா வகைகளின் விலை உயர்வு இவ் வாரத்தில் நிச்சயம்.

ஏற்கனவே 70ரூபாவரை உயர்ந்த சமை யல் எரிவாயு (காஸ்) மேலும் விலை உயரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 90ரூபா விலையை உயர்த்துவதற்கு 'ஷெல்' காஸ் அனுமதி கோரியுள்ளது. அது கிடைக்கும் பட் சத்தில் ஒரு காஸ் சிலிண்டர் 780ரூபாவாகும்.

பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலையை அரசு கணிசமாக உயர்த்தி இருப்பதால் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் கிடு கிடுவென உயர்வது தவிர்க்கமுடியாதது என் கின்றன வர்த்தக வட்டாரங்கள். ஏனைய பல அத்தியாவசியப் பொருள்களுக்கான மானியத்தை அரசு வெட்டவிருப்பது பற்றிய எச்சரிக்கை அறி விப்பை நிதியமைச்சர் ஏற்கனவே வெளியிட் டுள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை எக் கச்சக்கமாக உயரப்போவதை உறுதிப்படுத்தும் - கட்டியம் கூறும் - அபாய அறிவிப்பாகவே நிதியமைச்சரின் கருத்துக் கருதப்படுகின்றது.

எனவே விலை உயர்வுகள் பற்றிய அறிவித் தல்கள் இந்த வாரத்தில் வரிசையாக வரும் என எதிர்பார்க்கலாம். (க-13)

## படையினரின் உணவகங்கள் குறித்து தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.16

குடாநாட்டில் படையினர் தமது நிலைக ளுக்கு அருகில் அமைக்கும் உணவகங்கள் எமது கலாசாரத்தை சீர்குலைக்கும் நோக்கு டன் செயற்படுகின்றன. அவை குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

- இப்படி வேண்டுகோள் ஒன்றை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ளது.

அக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு சமா தான சூழல் தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் ஸ்ரீலங்கா இராணுவம் சமாதான சூழலைக் குழப் பும் நோக்குடன் பல்வேறுபட்ட செயற்பாடுக ளைச் செய்து வருகின்றது.

வெளிநாடுகளில் இருந்து இராணுவ உதவி களைப் பெறுவதும் இராணுவப் புலனாய்வுத் துறைக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்வ துமாக தனது செயற்பாட்டைத் தொடர்ந்து அது செய்து வருகின்றது.

அதுமட்டுமன்றி, தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கும் நோக்குடனும் தனது இராணுவப் புலனாய்வுத் துறைக்கான தகவல்களைப் பெறு வதற்குமாக இன்று யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவ நிலைகளுக்கு அண்மையில் வர்த் தக நிலையங்கள் நிறுவப்படுகின்றன. இந்த உணவகங்களில் மாலை நேரங்களில் உணவு விநியோகங்களை மேற்கொள்வதன் ஊடாக மக்களை அவ்விடங்களுக்கு வரவழைத்து தனது தமிழ்மக்களுக்கு எதிரான யுத்தத்தினை வேறு வடிவத்தில் இன்று மேற்கொண்டு வருகிறது.

அதாவது, அவ்விடங்களில் மலிவான முறை யில் விற்பனைகளைச் செய்வதன் ஊடாக மக்களைக் கவர்ந்திழுத்து கலாசாரத்தைச் சீரழிக்கக்கூடிய போதைப் பொருள்கள் மற்றும் நீலப்படங்கள் என்பனவற்றை இலவசமாக அவ்விடங்களில் வைத்து வழங்கி வருகின்ற னர். இது எமது மக்களின் போராட்ட உணர்வை திசை திருப்பும் நோக்கத்துடன் திட்டமிட்டு இராணுவப் புலனாய்வுத் துறையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, எமது மக் களை இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு எச்சரிக்கையாகச் செயற்படுமாறு கேட்டுநிற் கின்றோம். - என்றுள்ளது. (எ-3)

## திருட்டுச் சம்பவங்கள் தென்மராட்சியில் அதிகரிப்பு

சாவகச்சேரி,ஓக.16

தென்மராட்சியின் மட்டுவில், கல்வயல், சாவகச்சேரி நகரம், மீசாலை ஆகிய பகுதி களில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இத்தகைய திருட்டுச் சம்பவங்களை அடுத்து மேற்படி பகுதி களில் இளைஞர் குழுக்கள், சமூக சீர்திருத்தக் குழுக்கள் இரவு நேரக் கண்காணிப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குழுக்களாக இணைந்து திருட்டுக்களில் ஈடுபடும் திருடர்கள் பட்டப் பகலிலும் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் சென்று தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக வீடுகளில் சன நடமாட்டம் இல் லாத வேளையிலும் தனியாக பெண்கள் வீதி களில் நடந்து செல்லும் வேளைகளிலும் திருட்டு மற்றும் வழிப்பறிகள் இடம்பெறுவதா கவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-31)

## மதமாற்றத் தடுப்புச் சட்டத்துக்கு உயர் நீதிமன்று பச்சைக்கொடி

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத்துக்கு எதிரான சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர் நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாக அறியவருகி றது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாய கருக்கும் ஜனாதிபதிக்கும் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நாளை நாடாளுமன்றம் கூடும்போது உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் சபை யில் அறிவிப்பார் எனத் தெரிகின்றது.

இச்சட்டமூலம் தனிநபர் பிரேரணையாக ஜாதிக ஹெலஉறுமயவின் எம்.பியான கலா நிதி வண.ஓமல்பே சோபித தேரரினால் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

பலவந்தமாகவோ அல்லது கவர்ச்சியாலோ அல்லது வேறு தவறான முறைகளாலோ ஒரு வரை மதம் மாற்றுவதற்கு உதவியளிப்பது இந்தச் சட்டத்தின் கீழ் குற்றமாகின்றது.

இத்தகைய குற்றத்தை இழைப்பவருக்கு ஐந்தாண்டுக்கு மேற்படாத சிறை அல்லது ஒன் றரை லட்சம் ரூபாவுக்கு அதிகப்படாத அபரா தம் விதிக்க இச்சட்டமூலம் வகைசெய்கின்றது.

# கூட்டமைப்புக் குழப்பத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.முன்னணியும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன்வரமாட்டாது.

இந்த நெருக்கடியில் இதே நாடாளுமன் றத்தை வைத்துக்கொண்டு ஆட்சியைத் தொடர் வது இயலாத காரியம் என ஜனாதிபதி கருது கின்றாராம்.

அப்படியும் ஜே.வி.பி., சிஹல உறுமய போன்றவற்றின் இழுப்புக்கெல்லம் இழுபட்டுக் கொண்டு ஆட்சியைத் தொடர்ந்தாலும் இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சி களைத் தொடரமுடியாது. அதனால் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதும் துர்லபம். எனவே பொருளாதார நிலைமை சீரடையவும் வாய்ப்புக் கிட்டாது.

இவற்றையெல்லாம் மீறி தாராள மயமாக் கல், தனியார் மயமாக்கல் போன்ற கொள்கை களை நடைமுறைப்படுத்துவதன் மூலமாவது பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கலாம் என்றால் அதற்கும் இடங்கொடுக்காமல் ஜே.வி. பி. முட்டுக்கட்டை போடுகின்றது.

இந்த இக்கட்டுகளுக்கு மத்தியில் ஆட்சி யைத் தொடர்ந்தால் நாடு மோசமான நிலையை அடைவதோடு கட்சிக்கும் தனக்கும் நிரந்தர மான - நீங்காத - கெட்டபெயர் வந்துவிடும் என்ற யதார்த்தத்தை ஜனாதிபதி உணர்ந்தி ருக்கின்றார் என்று அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

எனவே இப்பிரச்சினைகளில் இருந்து முத லில் தன்னையும் தனது கட்சியையும், தொடர்ந்து நாட்டையும் விடுவிக்கும் மார்க்கம் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கிறாராம் ஜனாதிபதி.

அதன் பிரகாரமே புதிய பொதுத் தேர்தல் குறித்து அவரது சிந்தனை திரும்பியிருப்பதா கக் கூறப்படுகின்றது.

இக்கட்டான இந்தச் சமயத்தில் தன்னைச் சுற்றி உள்ளவர்கள் மீதான நம்பிக்கையையும் ஜனாதிபதி இழந்துவிட்டார் என்பது ஜனாதிபதி யுடன் நெருங்கிய வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி மேற்கொண்டுவரும் சமாதான முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்த ஜே.வி.பியினர் இப்பொழுது பொருளா தாரத்தை ஆட்டம் காணச் செய்வதிலும் தீவிர மாக முனைந்துள்ளனர் என்று ஜனாதிபதி பொரு முகின்றார்.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளதால் சர்வதேச உதவிகள் கிட்டுவதும் முடங்கிப் போயுள்ளது. அதனால் சர்வதேச உதவிகள் தாராளமாகக் கிடைக்கும்வரை இந்திய உதவி யின் மூலம் நிலைமையைச் சமாளிக்க ஜனாதி பதி இரகசியமான நடவடிக்கைகளை மேற்கொண் டிருந்தார்.

ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் நேரடி யாகத் தாமே தொடர்புகொண்டதுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மூலமும் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இதற்கு மாற்றீடாகவே இங்குள்ள மேலும் 107 எண்ணெய் நிரப்பும் நிலையங்களையும் இந்தியக் கம்பனி ஒன்றுக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. இதற்கான ஒப்பந்தம கைச்சாத்திடப்பட இருந்தவேளையில் ஜே.வி.பி யினர் காலைவாரிவிட்டுள்ளனர். ஜே.வி.பியின ரின் நேரடித் தூண்டுதலின் பேரிலேயே தனியார் மயமாக்கலை ஆட்சேபித்து பெற்றோலியக் கூட் டுத்தாபன ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தத் தில் குதித்தனர் என்பதும் ஜனாதிபதிக்குத் தெரியவந்துள்ளது.

இதனால் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எத்தனங் கள் யாவும் சிதறடிக்கப்பட்டுவிட்டன என்று கடுப் பாகிப்போயிருக்கிறார் ஜனாதிபதி.

ஜே.வி.பியினர் அரசாங்கத்தில் முக்கிய பங் காளிகளாக இருக்கும்போது நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் இச்சமயத்தில் - அதைச் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்து ழைப்பு வழங்கவேண்டிய அமைச்சரவைக் கூட் டுப் பொறுப்பு அவர்களுக்கும் உண்டு.

இக்கூட்டுப் பொறுப்பில் இருந்து ஜே.வி.பி யினர் தவறிவிட்டனர் என்று கருதும் ஜனாதிபதி தொடர்ந்தும் இவர்களை வைத்துக்கொண்டு எதையுமே செய்யமுடியாது என்று சிந்திக்கும் நிலைக்கு வந்துவிட்டார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூ பிக்க ஜாதிக ஹெலஉறுமய விதித்துள்ள முன் நிபந்தனைகளும், இ.தொ.காவின் இரண்டும் கெட்டான் நிலையும் கூட ஜனாதிபதிக்கு எரிச் சலை ஏற்படுத்தியுள்ளனவாம்.

கட்சியின் தலைமைப் பொறுப்பு தனக்குக் கிடைக்காததினால் அதிருப்தியடைந்துள்ள அனுரா பண்டாரநாயக்க பின்வரிசை உறுப்பினர்கள் சில ருடன் சேர்ந்து ஜே.வி.பினருக்குப் பக்கபலமா கச் செயல்படுகிறார் எனக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் முறை யிட்டுள்ளனர்.

அரசுக்குள்ளும் கட்சிக்குள்ளும் ஏற்பட்டுவரும் இக்கட்டான நிலையினால் எந்த சமயத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதே மேல் என்ற நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டுள்ளா ராம்.

புதிய பொதுத் தேர்தல் நடந்து அதில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனித்து வென்று ஆட்சியைப் பிடித்தாலும் சரி, இல்லை ஐ.தே.முன்னணி ஆட்சிக்கு வந்தாலும் சரி, இன் றைய நெருக்கடி நிலையில் இக்கட்டைத் தீர்ப் பதற்கு பொதுத்தேர்தல் ஒன்றே வழி என ஜனாதிபதி கருதுகின்றார்.

பொதுத்தேர்தல் ஒன்று நடந்து ஒரு வருட காலத்துக்கு நாடாளுமன்றத்தைத் தற்றுணி யில் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை.

ஆனாலும் -

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை இல்லாத இந்த அரசைத் தானாகவே கலைத்து விடுவதற்கான ஒரு தீர்மானத்தை எதிரணியி னரின் உதவியுடன் அந்த நாடாளுமன்றத்தி லேயே நிறைவேற்றச் செய்வது அப்படி ஒன் றும் கஷ்டமான காரியம் அல்ல என்று ஜனா திபதி கருதுகின்றார்.

பொதுத் தேர்தல் வாக்களிப்புக்கு அடை யாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் சட்ட மூலம் - ஐ.தே.கட்சியின் ஆட்சேபனையையும் மீறி - அவசர அவசரமாக நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்படுவதும் இந்தப் பின்னணியில் தான் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (க)

## மீள்குடியமர்ந்தோருக்கு வலி.மேற்கில் உதவி

வலி,தென்மேற்கு,ஓக.16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 தரை வழிப்பாதை திறக் கப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களில் வறுமை நிலை யிலுள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் வீட்டுப் பாவனைப்பொருள்களை வழங்கிவருகின்றது.

இதன் பிரகாரம் கடந்த 12ஆம் திகதி வியா ழக்கிழமையன்று பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் வைத்து பண் டத்தரிப்பு, சில்லாலை தெற்கு, வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுப் பாவ னைப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாளி, அலுமினியக் குடம், சாறி, சாரம், பிளாஸ்ரிக் பேசின், பாய், நுளம்பு வலை ஆகியன உட்பட மற்றும் பல பொருள்கள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் தயாரித்துச் சமர்ப்பித்த பெயர்ப்பட்டியலுக்குப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட்டன.

நாளை செவ்வாய்க்கிழமை மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாதகல் மேற்கு ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந் தவர்களுக்கு மாதகல் பிள்ளையார் கோயிலடி யிலுள்ள பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்க மாத கல் கிளைக் கட்டடத்தில் வைத்து பாவனைப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-135)

உதயன்

## இருமுனைகளில் சூழும் ஆபத்து!

நாடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் தொத்துப் பொறியில் அல்லாடும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, இன்றையநிலையில் இரண்டு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் சிக்கலில் உள்ளது.

அவற்றில் ஒன்று, வடக்கு - கிழக்கிலிருந்தும் மற்றது தென்னிலங்கையிலிருந்தும் பூதாகரமாகக் கிளம்பி, இந்த அரசையே விழுங்கிக் கபளீகரம் செய்துவிடும் பெரும் பிரச்சினைகளாக உருவெடுக்கும் சாத்தியம் நிறையவே உண்டு.

ஒன்று - தேங்கி, தடைப்பட்டு, இறுகிப்போய் நிற்கும் சமாதான முயற்சிகள்.

மற்றது - அந்தப் பின்னடைவாலும், திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கை இல்லாததாலும் நாடு எதிர்கொள்ளும் மோசமான - மிகமோசமான - பொருளாதார நெருக்கடி.

இந்த இரண்டு விடயங்களையும் இயன்றவரை இலாகவமாகக் கையாண்டு நிலைமையைச் சமாளித்து வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசை, தமது ஆட்சி அதிகார ஆசை என்ற சுயலாபத்துக்காகக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது பேராசையை எட்டுவதற்காகக் கூடாத, கூட்டம்தனைக் கூட்டுச் சேர்த்தார். பேரினவாதத்தில் ஊறித்திளைத்த ஜே.வி.பியைக் கட்டி அணைத்தார். இப்போது அந்தக் கூட்டை உதறவும் முடியாமல், கட்டிப் பிடிக்கவும் முடியாமல் தவிக்கின்றார் அவர்.

தீவிர பேரினவாதச் சக்திகளை அணி சேர்த்துக் கொண்டதால் சமாதான முயற்சிகளை முன்நகர்த்தமுடியாத சிக்கல் அவருக்கு. அதனால், வெளிநாட்டு உதவிகள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கையறுநிலை.

மோசமடைந்துவரும் பொருளாதார நிலையைத் தூக்கிப் பிடிக்கக் கூடிய வெளிநாட்டு உதவிகள் - சர்வதேசப் பங்களிப்புகள் - அமைதி முயற்சியில் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தை எட்டாததால் எட்டாக் கனியாகி விட்டன.

மறுபுறத்தில், நாட்டின் பொருளாதார நிலைமை அதலபாதாளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கின்றது. புதிய அரசு ஆட்சிக்கு வந்து நாலரைமாத காலத்துக்குள் அத்தியாவசியப் பொருள்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துவிட்டது. வரும் வாரங்களில் அது மேலும் ஏறி உச்சியைத்தொடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போதாக்குறைக்கு சந்திரிகா தனது நம்பிக்கைக்குரிய - பங்காளிக்கட்சியாகச் சேர்த்துக்கொண்ட - ஜே.வி.பி. தனது தொழிற்சங்கங்கள் ஊடாகப் புகுந்து விளையாடி, அரசின் நகர்வுகளுக்குத் தடக்குப் போடுகின்றது. எரிபொருள் விநியோகச் சிக்கலை ஏற்படுத்திய தொழிற்சங்க நடவடிக்கை போன்றவற்றின் பின்னணியில் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆபத்பாந்தவர்களான ஜே.வி.பியினர்தான் உள்ளனர் என்பது ஜனாதிபதிக்கு இப்போது நன்கு புரியத்தொடங்கியிருக்கும்.

நாட்டின் மிக முக்கியமான - தேசியப் பிரச்சினையான - இனப்பூசலுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் தான் அரசுத் தரப்புக்கு ஜே.வி.பியினர் முட்டுப்போடுகின்றார்கள் என்று பார்த்தால், வழமையான அரச நிர்வாகத்தையும் கூட அவர்கள் விட்டுவைப்பவர்களாக இல்லை. சேர்ந்திருந்தே குழிபறித்துத் தொல்லை கொடுக்கின்றார்கள்.

நாட்டின் உடைமைகளை 'வித்துச் சுட்டாவது' தற்போதைய நிதி நெருக்கடியைச் சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி தரப்பு எத்தனிக்கின்றது. ஆனால், அளவுக்கு அதிகமாக 'நாட்டுப்பற்று'ப் பேசும் ஜே.வி.பியோ அதற்குக் கிஞ்சித்தும் அனுமதிப்பதாக இல்லை.

சரியோ பிழையோ, ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் பொருளாதாரம் ஏதோ பொலிந்து சுபீட்சமடைந்துவிடவில்லை. ஆனால், நிலைமை கட்டுக்குள் இருந்தது. விலைவாசி கட்டுமட்டில் இருந்தது. இலங்கை நாணயத்தின் பெறுமதி, இப்போதுள்ளது போன்று மோசமாக வீழ்ந்துவிடவில்லை. பொருளாதார அபிவிருத்தி வேகம் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

ஆனால், இப்பொழுது எல்லாம் தலைகீழ். 'உள்ளதையும் கெடுத்தானாம் ஆண்டி' - என்பது போல தமது அரசியல் சுயலாப நோக்குகளுக்காக - நாட்டையும் எதிர்காலத்தையும் குட்டிச்சுவராக்கி விட்டு நிற்கிறார் ஜனாதிபதி.

அமைதி முயற்சிகளும் கருகிவிட்டன. பொருளாதார வளர்ச்சியும் செத்துவிட்டது. அந்தோ ... நாட்டின் எதிர்காலமே அந்தகாரத்தில்.

ஆனாலும், இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டவராக ஜனாதிபதி இல்லை. அவரது பேச்சுக்கள், செயற்பாடுகள், உத்தரவுகள் யதார்த்த நிலையை அவர் உணர்ந்துகொண்டார் என்பதை எடுத்துக் காட்டுவனவாக இல்லை.

அமைதி முயற்சி, பொருளாதாரப்போக்கு ஆகிய இரண்டிலும் நிலைமை வெகுவேகமாக மோசமாகிக் கொண்டிருக்கின்றது.

இப்போக்கு இன்னும் சற்றுக் காலத்திற்குத் தொடர்ந்தால் - திருத்த முடியாத - மீளமுடியாத - பெரும் ஆபத்துக்குள் நாடு வீழ்ந்துவிடும் என்பது உறுதி - நிச்சயத்திலும் நிச்சயம்!

பொருளாதாரச் சீர்கேடு தெற்கிலிருந்தும் இனப்பிரச்சினை வடக்கு - கிழக்கிலிருந்தும் ஆபத்துக்களாக அரசை வந்து சூழ்வது தவிர்க்கமுடியாததாகிவிடும். மிகவும் அந்தரமான நிலை!

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை இனியும் பொறுக்கத் தயாரில்லை!

### பாரிய விளைவுகள் ஏற்படும் என சமாசத்தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.16

வடபகுதி கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபடுவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது. அது தொடர்ந்தால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்படும்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்மாவட்டக் கடற்றொழிலாளர்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் றோலர்கள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது அதிகரித்துச் செல்கின்றது.

இதனால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. எமது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நீண்டகாலமாக இழுபறிப்பட்டுவரும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக கடந்த மாதம் 27ஆம் திகதி இந்திய கடற்றொழிலாளர்களுக்கும் வட மாகாணக் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

அதில் இந்திய மீனவர்கள் எக்காரணம் கொண்டும் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட முடியாது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் தேவையென இந்திய மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு அமைவாக தலைமன்னார் கடற்கரையிலிருந்து 3 மைல்களுக்கு அப்பாலும் நெடுந்தீவுக் கரையிலிருந்து 5மைலகளுக்கு அப்பாலும் வடகடல் பிரதேசத்திலிருந்து 10மைல்களுக்கு அப்பாலும் இந்த மூன்று மாதகாலப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க முடியும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், இந்த விடயங்கள் பற்றி வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகளைத் தென்னிந்தியாவிற்கு வருகைதந்து, அங்குள்ள மீனவர்களுக்கு நிலைமைகளைத் தெளிவுபடுத்துமாறு தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

ஆனால், இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்று ஒருவாரத்துக்குள்ளேயே அவற்றை மீறும் வகையில் இந்திய மீனவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இது மிகவும் வேதனை தருகின்ற விடயமாகும்.

இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கடற்றொழில் நீரியல் வளத்துணை அமைச்சருடனும் கலந்துரையாடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த நிலையில், இந்திய மீனவரின் அத்துமீறல்கள் இனியும் தொடருமாக இருந்தால் அதற்கு எதிராக மீனவர் சமூகங்கள் இணைந்து பாரிய போராட்டங்களை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் - என்று கூறினார். (4-5)

## பாடசாலை மாணவிகளுக்கு இளைஞர்களால் தொல்லை!

குருநகர்,ஓக.16

யாழ். நகரத்தை அண்டிய மகளிர் பாடசாலை ஒன்றுக்கு அருகிலுள்ள வீதிகளில் பாடசாலை நேரங்களில் சுற்றித் திரியும் இளைஞர்களின் அடாவடித்தனத்தினால் இப்பாடசாலைக்குச் செல்லும் மாணவிகள் மிகவும் அச்சமடைந்துள்ளனர் என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மார்ட்டின் வீதி, ஐந்தாம் குறுக்கு வீதி, ஆறாம் குறுக்கு வீதி மற்றும் கன்னியாடம் வீதி ஆகியவற்றில பாடசாலை ஆரம்பமாகும் நேரம், முடிவடையும் நேரங்களில் குழுக்களாக சைக்கிளில் வரும் இளைஞர்கள் மாணவிகளிடம் சேஷ்டைகள புரிகின்றனர். அத்துடன், அவர்களுடன் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து வருகிறார்கள்.

ஒரு சில இளைஞர் குழுக்கள் தமக்கு விருப்பமான மாணவிகளைக் கண்டதும் டிஜிற்றல் கமரா மூலம் வீதிகளில் வைத்தே படம் எடுத்துவருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

வரம்பு மீறிவரும் இளைஞர்களது செயல்களினால் ஒழுங்காகச் செல்லும் மாணவிகள் அச்சமடைந்து வருகிறார்கள் எனவும் இளைஞர்கள் மீது சமூக சீர்திருத்தக் குழுக்கள் மற்றும் பொலீஸார் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் எனவும் மாணவிகளின் பெற்றோர் தரப்பில சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (4-51)

### விருந்துபசாரம் ஒன்றுக்காக

## கோழிகளைத் திருடிய மாணவர்கள் சிக்கினர்!

கொடிகாமம்,ஓக.16

விருந்துபசாரம் ஒன்றுக்காக இரவு வேளை திருட்டுத்தனமாகக் கோழிகளைப் பிடித்தனர் என்று கூறப்படும் 3 மாணவர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமம் நகரை அண்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம பற்றித் தெரியவருவதாவது, இரவு நேரத்தில் வீதியில் சந்தேகத்திற்கு இடமாக 3 இளைஞர்கள் நின்றனர் எனவும் அந்த வீதியால் வந்த வர்த்தகர் ஒருவர் அவர்களை நெருங்கியபோது மூவரும் ஓடமுற்பட்டனர் எனவும் - கூறப்பட்டது. ஓடமுற்பட்டோரில் ஒருவரைப் பிரஸ்தாப வர்த்தகர் துரத்திப் பிடித்தார். அவரை விசாரித்ததில் மற்றைய இருவரும் அங்கு கூடிய அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

அப்போதே விருந்துபசாரம் ஒன்றிற்கு இறைச்சி சமைப்பதற்காக அவர் கள் கோழிகளைத் திருடியமை தெரியவந்துள்ளது.

அவர்கள் பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் எனவும் தெரியவந்தது. (4-74)

## சேதமடைந்த 150 வீடுகளை புனரமைக்க 'கரித்தாஸ்' உதவி

வலி.மேற்கு,ஓக.16

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் வருமானம் குறைந்த குடும்பங்களின் சேதமடைந்த 150 வீடுகள் 'கரித்தாஸ்' பிரான்ஸ் நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை 'கரித்தாஸ்' பிரான்ஸ் நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனின் முயற்சியினால் வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் 100 வீடுகளும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும் திருத்தியமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வீட்டுக்கும் 50 ஆயிரம் ரூபாவை நிறுவனத்தினர் செலவுசெய்யத் திட்டமிட்டுள்ளனர்.

பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினரும் 'கரித்தாஸ்' பிரான்ஸ் நிறுவனத்தினரும் இணைந்து தற்போது பயனாளிகளைத் தெரிவுசெய்துள்ளனர். (4-175)

## சந்நிதி ஆலயத் திருவிழாவையொட்டி தெய்வீக நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

வடமராட்சி,ஓக.16

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன்கோவில் வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இதனையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் தெய்வீக இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்துள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெறும் அன்னதான சேவைக்கு முன்னதாகத் தினமும் காலை 10 மணிக்கு தெய்வீகக் கலைநிகழ்வுகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு முன்னர் முடிவடையும. தொடர்ந்து அன்னதானம் வழங்கபபடும்.

மகோற்சவத்தின் முதல்நாளான இன்று திங்கட்கிழமை சாயி மன்றம் வழங்கும் பஜனையும் நாளை செவ்வாய்க்கிழமை 'முருகன் செயற்பாடு' என்னும் தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ தி.சோமஸ்கந்தராசக் குருக்களின் சொற்பொழிவும் இடம்பெறும்.

மூன்றாம் நாளான புதன்கிழமை 'அருள் பெறவழி' என்னும் தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சித்தாந்த பண்டிதர் கீழ்க்கரவை நவத்தின் சொற்பொழிவும் இடம்பெறும். (4-173)

## பூதந்தேவனார் கழகத்தின் தொல்காப்பிய மாநாடு

### அடுத்தமாதம் கொழும்பில் நடக்கிறது

யாழ்ப்பாணம்,ஓக.16

தமிழ்மொழித்தொன்மையை விளக்கும் தொல்காப்பிய நூலின் பெருமையை எடுத்துக்கூறும் வகையில் 'தொல்காப்பிய மாநாடு' ஒன்று அடுத்த மாதம் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஈழத்துப் பூதந்தேவனார் அரங்கில் நடைபெறவுள்ளது.

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் ஏற்பாடு செய்து நடத்தவுள்ள இந்த மாநாட்டில், தமிழ் மொழித் தொன்மையையும் சிறப்பையும் பண்டையத் தமிழ் உயர்வையும் கொண்ட ஈழத்துத் தமிழறிஞர்களும், தமிழகத் தமிழறிஞர்களும் மற்றும் உலக நாடுகளின் அறிஞர்கள் சிலரும் கலந்துகொண்டு சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த மாநாட்டின்போது தொல்காப்பியம் தொடர்பாக வெளிவந்த நூற்காட்சிகளும் அங்கு இடம்பெறவுள்ளன. (4-6)

### நாளை

ஆவணி 01
செவ்வாய்க்கிழமை
(17.08.2004)
திதி : பிரதமை
முற்பகல் 8.24 வரை
நட்சத்திரம் : மகம்
முற்பகல் 10.24 வரை
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம்: 3.05 - 4.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

முடியாது என்பதை முடிந்தவரை அகற்றிவிடு. நீயே எதிர்காலத்தின் சிறந்த சாதனையாளன்.

## ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கு நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், ஓக.16

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை செவ்வாயக்கிழமை நடைபெறவுளளது.

விண்ணப்பதாரிகள் அன்றையதினம் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை திருநெல்வேலி, பரமேஸ்வராச்சந்தியிலுள்ள தலைமைச் செயலகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் தபால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(3-201)

## பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம்,ஓக.16

பறறைகள் நிறைந்த பாதையூடாகச் சென்றி வரின் சைக்கிள் சில்லில் சிக்கிய பாம்பு அவரைத் தீண்டியது.

கோப்பாய் மத்தியில் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ஆதயாளசீலன் (வயது 35) என்பவரே பாம்புக் கடிக்கிலக்கானவர் ஆவார்.

இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (4-15)

## திருக்குடும்பப் பொதுநிலைய உறுப்பினர்கள் மாநாடு

குருநகர்,ஓக.16

திருக்குடும்ப பொதுநிலையத் துணை உறுப்பினர்களுக்கான நான்காவது ஆசிய மாநாடு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கொழும்பு, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்து வருகைதரும் சுமார் 60இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டுக்கு றோமாபுரியில் இருந்து தாய்ச்சங்க உறுப்பினராகக் கலந்துகொள்ளும் அருட்சகோதரி வினிபிறிட்டா தலைமை வகிப்பார்.

மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சலா மற்றும் ஆசிய பிராந்தியத் தலைவர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ம.லீனஸ் ஆகியோர்களின் வழி நடத்தலில் இம்மாநாடு நடைபெறும்.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்துச் சிறப்புரையாற்றவுள்ளார். (4-51)

## வலி. தெற்கில் மயானங்கள் புனரமைப்பு

ஏழாலை,ஓக.16

வலி.தெற்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் தாவடி, பூவோடை, சுன்னாகம் கொத்தியாலடி, கந்தரோடை ஆகிய இந்துமயானங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட அபிவிருத்திச் சங்கங்கள் உடனடியாக வலி.தெற்குப் பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு மயானங்களின் அபிவிருத்திப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலி தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் கேட்டுள்ளார். (4-45)

## காயவிடும் வெங்காயம் இரவு வேளை திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.16

வலி.கிழக்குப் பிரதேசத்தில் தோட்டங்களில் அறுவடை செய்யப்படும் வெங்காயங்களை இரவில் காயவிடும் வேளையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இத்திருட்டுச் சம்பவங்களால் விவசாயிகள் தமது தோட்டங்களில் இரவில் காவல் இருந்து வெங்காயத்தைப் பாதுகாத்துவருகின்றனர்.

(4-6-17)

## இளையோர் ஆணைக்குழுவின் நிர்வாகிகள் தெரிவு

குருநகர்,ஓக.16

யாழ். மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் ஆணைக்குழுவின் இயக்குநர் சாள்ஸ் கொரின்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

செயலாளராக செல்வி பி.வாசுகியும், உப செயலாளராக கே.செல்வராஜாவும், பொருளாளராக எம்.ஜோர்ஜும் தெரிவுசெய்யப்பட்டனர்.(4-51)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.16

தீவுப்பகுதி தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மற்றும் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் என்பன பிற்போடப்பட்டுள்ளன.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வேலணை உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (எ-201)

**ஈசன் கல்வி நிலையம்**

**A/L 2005 DAY CLASS**
கலைப் பிரிவு

ECO.: திரு. உதயன்
TAM.: திரு. குழந்தை
HIN.: திரு. சுரேஸ்
LOG.: திரு. S.S.மனோகரன்
DRA.: திரு. சந்திரன்
GEO.: திரு. சங்கர்

ஆரம்பம்:19.08.2004
THU: 7.00 a.m. (S.L.T.)

(35240)(42-16-14)

## விபத்தில் இளைஞர் காயம்!

சாவகச்சேரி,ஓக.16

மோட்டார் சைக்கிளின் குறுக்கே கட்டாக்காலி நாய் ஓடியதால் ஏற்பட்ட விபத்தில் சங்கத்தானையைச் சேர்ந்த எஸ். செந்தில்குமார் (வயது 27) என்ற இளைஞர் தலையில் காயமடைந்தார். காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

(4-31)

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு எண் 603
திகதி 13-08-2004

செல்லுபடியாகும் தொடர் இல. 5835275-5850713

வெற்றி இலக்கங்கள் 04 16 17 24
லக்கினம் கும்பம்

ஜக்பொட் பரிசு ரூபா.69,54,200/- வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 73,39,825/-

| | | | |
|---|---|---|---|
| 1.இல | 3,45,216 | 10/- | 34,52,160/- |
| 2.இலக்கங்கள் | 31,743 | 20/- | 6,34,860/- |
| 1.இல + லக்கினம் | 31,441 | 30/- | 9,43,230/- |
| 2.இல + லக்கினம் | 2,835 | 100/- | 2,83,500/- |
| 3.இலக்கங்கள் | 852 | 500/- | 4,26,000/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 69,54,200/- | - |
| மொத்தம் | 4,12,170 | - | 76,87,250/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,87,250/-

5838840-8-35
5840693-1-29
5845472-6-56
5848125-1-04
5849402-0-80

அபிவிருத்தி லொத்தர் சபை

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3703553 இலிருந்து 3720729 வரை
சீட்டிழுப்பு இல. 1530
திகதி 14.08.2004

வெற்றி எண்கள் 08 10 18 36 48
போனஸ் எண் 50

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்படவில்லை

| | | | |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 107 | 10,000/- | 10,70,000/- |
| 3 | 5,351 | 500/- | 26,75,500/- |
| 2 | 88,336 | 20/- | 17,66,720/- |
| … | 108,213 | 10/- | 10,82,130/- |

Rs. 23,37,500/-

3715823-3-69
3713611-1-85
3707548-5-02
3703723-4-61
3708649-2-93

அபிவிருத்தி லொத்தர் சபை

## மரண அறிவித்தல்

### செபமாலை சிறில் துரைசிங்கம்



சிலலாலையைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் தற்சமயம் ஆஸ்திரேலியாவில் வசித்தவருமான செபமாலை சிறில் துரைசிங்கம் (இளைப்பாறிய யாழ்., மன்னார் கச்சேரி உத்தியோகத்தர்) அவர்கள் 13.08.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பியின் அன்பு மூத்தமகனும் காலஞ்சென்ற திரு.திருமதி தி.பா.வ.நீக்கிலாப்பிள்ளை (சில்லாலை) அவர்களின் அன்பு மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை திரேசம்மாவின் அருமைக் கணவரும் மயூரதி, மனோறதி, இராசேந்திரா, இரட்னேந்திரா, மகிழ்றதி, இறகுனேந்திரா ஆகியோரின் அருமைத் தந்தையும் தங்கராசா, தமயந்தி, ஹானி, மில்றோய் ஆகியோரின் அன்பு மாமனாரும் துரைரத்தினம், யோகரட்னம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*47, மாட்டின் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (சி-36325) (24-14-16)

தகவல்:
நீ.நீக்கிலாப்பிள்ளை (மச்சான்).

## வேலையற்ற பட்டதாரிகள் சங்க

### அவசர அறிவிப்பு

பட்டதாரிகள் பெயர்ப்பட்டியல் யாவும் பூர்த்தியாக்கப்பட உள்ளதால் சங்கத்தால் நியமிக்கப்பட்ட பிரதேச செயலக பிரதிநிதிகள் யாவரும் இன்று (16.08.2004) திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு சங்க அலுவலகத்திற்குச் சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றனர். அத்துடன், நிர்வாகசபை அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடலும் இடம்பெறும் என்பதைத் தெரியப்படுத்துகின்றோம்.

- செயலாளர்

(35295)(39-14-16-24)

## 21 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

திருமதி

### நாகலிங்கம் மனோன்மணி



தோற்றம் 15.07.1941 — மறைவு 28.07.2004

*அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்தீர் – என்றும்*
*ஆற்றுவாரோ தேற்றுவாரோ இன்றித் தவிக்கின்றோம் – இன்று*
*என்றும் உங்கள் இலட்சியங்களுடன் – நாங்கள்*
*உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.*

எமது குடும்ப குலவிளக்கின் 21ஆம் நாள் நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (17.08.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.*

- பிள்ளைகள்.

(35290) (24-16-14)

# அலைகடல் ஓரம் அமர்ந்து அருள்சுரக்கும் சந்நிதியான்

இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் கொடியேற்றத்துடன் எம்பெருமானின் வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகின்றது. 'இலங்கையின் வடபாகத்தில் மட்டுமன்றி முழு உலகத்திலுள்ள அடியார்களுக்கும் நிறைவான அருளை வழங்கி அவர்களைக் காத்து வருகின்ற கடவுளாக சந்நிதி முருகன் கருணை மழை பொழிகின்றான்' என சென்ற வருட உற்சவ கால நிகழ்வில் சந்நிதி வேலவனின் அருளின் சிறப்பை நல்லை ஆதீன குருமுதல்வர் வெளிப்படுத்தியிருந்தார்.

அவர் குறிப்பிட்டது போல கலியுகக் கந்தன் சந்நிதி வேலவனின் கொடியேற்றமும் உற்சவ காலங்களும் உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற மக்களால் பக்திப்பரவசத்துடன் கொண்டாடப்படுவதிலிருந்து எம்பெருமானின் கருணைக் கடலை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளமுடியும்.

எமது சமயத்தில், எமது ஆலயங்களில் நாம் அனைவரும் எதிர்பார்க்கின்ற உண்மையான மரபுகள் இங்கே இன்றும் பேணப்படுகின்றன. உண்மையான இறைவழிபாட்டினை, உண்மையான பக்திநிலையை, உண்மையான பண்பாட்டினை மக்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற காட்சிகளை எல்லாம் ஒருங்கே காணுகின்ற சிறப்பும் இங்கே இடம்பெறுகின்றமை அனைவருக்கும் திருப்தியை ஏற்படுத்தும் விடயமாகும்.

ஏராளமான மக்கள் ஒன்றுசேருகின்ற கொடியேற்றத்திருவிழாவில் மக்கள் அனைவரும் அகத்திலும், புறத்திலும் உண்மையான பக்தியை வெளிப்படுத்தும் காட்சி மனத்திற்கு சாந்தியை ஏற்படுத்தி எம்மையும் தூய்மைப்படுத்துவதாக அமைந்துவிடுகிறது.

சந்நிதியில் கொடியேற்றத் திருவிழா என்பது கொடித்தம்பம் இல்லாது இடம்பெறும் நிகழ்வாக இருந்தாலும் விசேட சடங்குகள், சம்பிரதாயங்களின் அடிப்படையில் நடைபெற்றுவரும் விழாவாக நடைபெற்றுவருகிறது.

சந்நிதியில் உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்பு கதிர்காமத்தில் உற்சவம் ஆரம்பிக்கும் நாள் சந்நிதியிலிருந்து வேல் செல்லும் நிகழ்வு இங்கே இடம்பெறும்.


இந்த நிகழ்வு சந்நிதியில் வருடாந்த உற்சவத்திற்கு கட்டியம் கூறுகின்ற ஒரு நிகழ்வாகவே கொள்ளப்பட்டு திருவிழாவிற்குரிய முன் ஆயத்தங்களை எல்லாம் இங்கே பூசகர்கள் மேற்கொள்ள ஆரம்பித்து விடுவார்கள்.

### உற்சவகாலச் சிறப்புக்கள்

சந்நிதி முருகன் உற்சவகாலத்தில் வீதி உலா வரும்பொழுது வெவ்வேறு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டாலும் வெள்ளி மயிலில் வேல வடிவிலேயே எப்பொழுதும் காட்சியளிப்பார்.

அதுமட்டுமன்றி, இங்கே இடம்பெறும் சாத்துப்படிகளும், சோடனைகளும் பூக்களாலேயே மேற்கொள்ளப்படும் வழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாறு புதிய பூக்களைத் தினமும் கொய்து செடில் சாத்துப்படி, நாகவடிவசாத்துப்படி, படல் சாத்துப்படி எனப் பல்வேறு வகைப்பட்ட சாத்துப்படிகளை ஆலயத்தின் மூத்த பூசகர்கள் மிகவும் நேர்த்தியாகவும் இயற்கை அழகு ததும்பும் வகையிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய செயற்பாட்டை செய்வதற்காக பூக்காரர் எனப்படும் அன்பர்கள் பெருந்தொகையான பூக்களை தினமும் சேகரித்து வந்து ஆலயத்தில் வழங்கிவருகின்றனர். இந்தப் பூக்காரர் பெரும்பாலும் இந்த ஊரைச்சேர்ந்தவர்



களாகவும், பரம்பரையாகவும் இதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் ஆலய உற்சவத்தின் பல்வேறு செயற்பாடுகளிலும் காத்திரமான பங்களிப்பை செய்து வருவதனால் பூக்காரர் திருவிழா என்ற ஒரு திருவிழா தீர்த்த உற்சவம் முடிந்த மறுநாள் இடம்பெறும் வழக்கமும் இருந்து வருகின்றது.

சந்நிதி உற்சவத்தின்பொழுது முதல் நான்கு நாள்களும் இரவுத் திருவிழா மட்டும் இடம்பெறும். 5 ஆம் நாளில் இருந்தே காலைத் திருவிழா இடம்பெறும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதியில் வீதி உலாவின் பொழுது ஏனைய ஆலயங்களைப் போன்று சுவாமி நேர்வாசலால் வெளியே செல்வது, உள்ளே வருவது ஆகிய நடைமுறைகள் பின்பற்றுவதில்லை. மாறாக இடது பக்கத்திலுள்ள வாசல் வழியாகவே அதாவது மடப்பள்ளிக்குமமணிக்கோபுரத்திற்குமிடையிலுள்ள அந்த வாசல வழியாக எம்பெருமான் திருவுலா வருகின்றார்.

மருதர் கதிர்காமரும், சந்நிதி முருகனும் ஆலயத்தின் முகப்பு வாசலிலுள்ள இரு திண்ணைகளிலும் இருந்து உரையாடிய காரணத்தால் அந்த வழியால் செல்லக்கூடாது என்று ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட மரபு இன்னும் இங்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

எம்பெருமான் உள்வீதி உலா வரும்பொழுதும், வெளி வீதியுலா வரும்பொழுதும் சில விசேட மரபுகள் இவ்வாலயத்தில் பேணப்படுவதை அடியார்கள் அவதானிக்கமுடியும். உள வீதியுலாவின் பொழுது எம்பெருமானின் வள்ளியம்மன் வாசலுக்கு வந்தவுடன் அங்கே சுவாமி வந்த வாகனம் சிறிது நேரம் தங்கவைக்கப்படும்

அப்பொழுது பூசகர் எழுந்தருளி வந்த வேல் வடிவான எம்பெருமானை மஞ்சள் துணியால் சுத்தி தனது கையில் எடுக்க அந்தப் பூசகரை கூடாரம் போன்ற துணியால் பூக்காரர்கள் மறைத்தபடி அம்மன் வாசலுக்கு அழைத்துச் செல்வார்கள்

அங்கே பூசகர் எழுந்தருளி வந்த வேலை வள்ளி அம்மனுடன் இருக்கவைத்து, வள்ளி அம்மனுக்கும் நாகதம்பிரானுக்கும் பூசை நடத்துவர். பூசை நடைபெற்ற பின்பு மீண்டும் எழுந்தருளி வந்த வாகனத்துக்கு வேல் கொண்டு செல்லப்பட்டு அங்கே வைக்கப்பட மீண்டும் வீதியுலா தொடரும்.

இந்த நடைமுறை ஒவ்வொரு திருவிழாவின்போதும் மேற்கொள்ளப்படுகின்றது. வெளி வீதி உலாவரும்போது வடக்கு வாசலில் மட்டுமே

## செல்வச் சந்நிதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

கும்பம் வைத்தல், பட்டுச்சாத்துதல் என்பன இடம்பெறும். ஆனால், வீதி உலாவின்போது எலலாத் திசைகளிலும் பூசகரினால் எம்பெருமானுக்கு தீபாராதனை காட்டப்படும். எம்பெருமான வடக்கு வீதிக்கு வந்தபின்பு உள்ளே சென்ற பின்பும் எச்சரிக்கைப் பராக்கு என்ற பாடலும் குறிப்பிட்ட பரம்பரையை சேர்ந்தவர்களால் பாடப்படும்.

இது எம்பெருமானின் மீது பாடப்படும் பாடலாக இருந்தாலும் அனைவரும் எச்சரிக்கையாகவும், அவதானமாகவும், நிதானமாகவும் இருப்பதற்காகவே பாடப்படுவதாக கொள்ளவேண்டும்.

வீதி உலா முடிந்த பின்பு ஆலயத்தில் உள் மண்டபத்திலிருந்து பிள்ளையார் வாசல்வரை விளக்கெடுக்கும் சிறுமிகள் தமக்குரிய சடங்குகளை அனுசரித்து வரிசையாக விளக்கெடுத்துச் செல்லும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

தீர்த்தத் திருவிழாவின்பொழுது தீர்த்தம் ஆடி முடிந்த பின் வேல் வடிவில் இருக்கும் எழுந்தருளி முருகன் வள்ளி அம்மனிடம் சென்று பகல் முழுவதும் அங்கேயே தங்கியிருப்பார். அன்றைய தினம் வள்ளி அம்மனிடம் முருகன் இணைந்திருக்கின்ற காட்சியை அடியார்கள் கண்குளிரக் காணமுடியும்.

இதனால், மாலையில் மௌனத்திருவிழா, ஊடல் திருவிழாவாகவே இடம்பெறும். பகல் முழுவதும் முருகன் வள்ளி அம்மனுடன் இருந்த காரணத்தால் மூலஸ்தானத்தில் இருக்கும் தெய்வானை அம்மன் இரண்டு தடவைகள் கதவை அடைத்து முருகனைத் திருப்பி அனுப்பி விடுவார். மூன்றாம் முறை அமைதியாகவும், அடக்கமாக முருகன் செல்லுகின்ற பொழுதே தெய்வானை அம்மன் கதவினைத் திறந்து அவருக்கு அனுமதி வழங்கும் அற்புதமான காட்சிகளையும் அனைவரும் ஆனந்தப் பரவசத்துடன் பார்த்து மகிழ்வார்கள்.

சந்நிதி முருகன் மருதர் கதிர்காமருக்கு வாக்களித்தபடி கொடியேற்றத் திருவிழாவின் பொழுதும் மற்றும் பதினொராம் திருவிழா தொடககம் பூக்காரத் திருவிழா வரையும் ஆலயத்திலே, ஆலயச் சூழலிலே அடியார்களில் ஒருவராய் சந்நிதி முருகன் இருப்பார் என்ற நம்பிக்கை இன்றும் இருந்து வருகின்றது.

இந்த நாள்களில் யாராவது தகாத செயல்கள் செய்தால் அடுத்த வருட உற்சவத்துக்கு முன்பு அவர்கள் தண்டிக்கப்படுவர் என்ற விடயமும் நடைமுறையில் இடம்பெறுவதையும் நாம் காணமுடிகின்றது.

ஐவராசு முனிவர் சமாதி அடைந்த இடத்தில பூவரச மரம் வளர்ந்திருப்பதும் அதற்கு மிக அருகிலேயே மூலஸ்தானத்தில் கலியுகக் கந்தன் ஆற்றங்கரை வேலவன் குடிகொண்டிருப்பதும் இந்த ஆலயத்தின் தனித்துவமானதும், அதே நேரம் புனிதமானதுமான விடயங்களாகும். உறசவ காலத்தில் வள்ளிக்கொடி முளைத்திருப்பதையும் நாம் இங்கே காணமுடியும்.

### புதிய தேரும் எம்பெருமானின் திருவிளையாடலும்

சென்ற வருட உற்சவத்தின்போது தேர் குடைசாய்ந்த நிகழ்வு துன்பகரமான நிகழ்வாக பலராலும் நோக்கப்பட்டாலும் அங்கே உயிர்ச்சேதம் போன்ற அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் விட்டது சந்நிதியானின் திருவிளையாடல் என்றே கருதுகிறோம்.

**திரு.ந.அரியரத்தினம்.**

உண்மையில் கட்டுத்தேரின் பாவனைக் காலம் முடிவடைந்து புதிய தேரினை உருவாக்க வேண்டிய தேவை அங்கே காணப்பட்டது. அதற்கான திருவிளையாடலே அங்கு இடம் பெற்றது. அதற்கிணங்க புதிய தேர் வேலைகள் யாவும் முடிவடைந்து இந்த வருட உற்சவத்தில் புதிய தேரிலே எம்பெருமான் பவனி வர உள்ளார்.

ஓம் முருகா!




அண்மையில் நடைபெற்ற 2004 - 2005 ஆம் ஆண்டுகளுக்கான நல்லூர் - கோப்பாய் அரிமாக் கழகத்தின் பதவி ஏற்பு வைபவத்தில் எடுக்கப்பட்ட படம். கோப்பாய் அரிமாக் கழகத்தின் புதிய தலைவர் லயன் ஜீர்த்தி ஞானசேகரவேல் உரையாற்றுவதையும் அருகில் 306 B உதவி மாவட்ட ஆளுநர் லயன் சரத் குணசேகரா, ர/11 பிராந்தியத் தலைவர் லயன் முத்துக்குமாரசாமி, முன்னாள் கோப்பாய் அரிமாக் கழகத்தின் தலைவர் லயன் இ.பாலசுந்தரம், பிராந்தியம் 10 இன் தலைவர் லயன் எஸ்.ரவீந்திரா, மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.சற்குணராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். *(படம் வலி.கிழக்குச் செய்தியாளர்)*

# தென்மராட்சி கல்வி வலய சஞ்சிகைப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஓக.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட் கையெழுத்துச் சஞ்சிகைப போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மாகாணக்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் இப்போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**பாலர் மேற்பிரிவு**

முதலாமிடம் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (தகளி), 2 ஆம் இடம் - சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை (இளந்தளிர்), 3 ஆம் இடம் - மீசாலை வீரசிங்கம் ம.வி. (சமாதான அருவி).

**இடைநிலைப்பிரிவு**

முதலாம் இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி (அரும்பு), 2ஆம் இடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (தேமதூரம்), 3 ஆம் இடம் - மட்டுவில் கமலாசினி வித்தி. (உதயம்).

**இடைநிலைப்பிரிவு II**

முதலாமிடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (சந்து), 2 ஆம் இடம் மீசாலை வீரசிங்கம் ம.வி. (சமாதான ஒளி), 3 ஆம் இடம் - மட்டுவில் கமலாசினி வித்தி. (சுதந்திரக் காற்று).

**இடைநிலைப் பிரிவு III**

முதலாமிடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (சமாதானி), 2 ஆம் இடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி (சுபீட்சம்), 3 ஆம் இடம் - மீசாலை வீரசிங்கம் ம.வி. (சமாதானத் தளிர்).

**கல்லூரிப் பிரிவு**

முதலாமிடம் - மீசாலை வீரசிங்கம் ம.வி. (சமாதானத் தென்றல்), 2 ஆம் இடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (சமரசம்) 3ஆம் இடம் - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. (பாலம்).

இப்போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட 15 கையெழுத்துச் சஞ்சிகைகள் மாகாண மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (4-117)

# விவசாயக் கிராமம் தெரிவு

வலி.மேற்கு,ஓக.16

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சங்கானை மத்திக் கிராமம் விவசாயக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு கமநல சேவை நிலையப் பிரிவில இருந்தும் ஒவ்வொரு கிராமம் விவசாயக் கிராமமாக தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

விவசாயக்கிராமமாக தெரிவுசெய்யப்படுகின்ற கிராம மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள அராலி மத்தி, அராலி மேற்கு, சங்கானை மத்தி ஆகிய மூன்று கிராமங்களும் விவசாயப் போதனாசிரியர், பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் ஆகியோர்களைக் கொண்ட குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டு சங்கானை மத்தி விவசாயக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டது. (4-175)

## முங்கோடைக் கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்கும்

வலி.மேற்கு,ஓக.16

தொல்புரம் - முங்கோடைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கட்டவேலைகளை இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை உபஅலுவலகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

வலி.மேற்குப் பிரதேச செயலகம் முங்கோடை கிராமத்துக்கு மின்சார விநியோகத்தை வழங்குவதற்கென 5லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளது. (எ-175)

# உள்ளூராட்சிச் சபைகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகவுள்ள ஆளணிகள் விரைவில் நிரப்ப மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றிடமாக உள்ள - அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் தொடர்பான விவரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தெ.து.விஜயலட்சுமி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கோரியுள்ளார்.

எழுதுநர் சேவை (விசேட தரம், வகுப்பு I, வகுப்பு II), கணக்குப் பதியுநர், காசாளா, தட்டெழுத்தாளர் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்), சுருக்கெழுத்தாளர், களஞ்சியப் பொறுப்பாளர், பாலர் பாடசாலை ஆசிரியர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் -

வருமானப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், ஆய்வு உத்தியோகத்தர்கள், நூலகர், உள்ளூராட்சி உதவியாளர் ஆகிய ஆளணி தொடர்பான விவரங்களே கோரப்பட்டுள்ளன.

சபைகளில் அனுமதிக்கப்பட்ட ஆளணி தற்போதைய நிலை, வெற்றிடம், மேலதிகம் போன்ற விவரங்களையும் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 - 08 - 1951



மறைவு 29 - 07 - 2003

### திருமதி தெய்வேந்திரம் கௌசலாதேவி

மங்கையர் திலகமாய் மாண்புடன் வாழ்ந்த தெய்வமே!
உங்களை நாங்கள் மறக்கவே மாட்டோம் தாயே
எங்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்த பாச தீபமே
தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் உருவம் மட்டும்
எங்கள் நெஞ்சைவிட்டு மறையவே மறையாது!
ஓம் சாந்தி!

மங்களகிரி,
பண்டகை, உடுப்பிட்டி.

உங்கள் பிரிவால் துயருறும்:
தெய்வேந்திரம் குடும்பத்தினர்.

(34091) (26-18-17-24)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 26 - 07 - 1919



உதிர்வு 16 - 07 - 2004

### அமரர் வைரமுத்து இராசரத்தினம்

அருமையுடன் பெருமையுடன் எமை அரவணைத்து
கருத்துடனே எமக்குக் கனிவு தந்து - கண்ணின்
கருமணியாய் கருதியெம்மை மகிழ்ந்தணைத்த
அன்புத்தெய்வமே!
என்றும் வாழ்வோம் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

வவுனில்,
திக்கம், அல்வாய்.

(35244) (26-18-17-24)

- குடும்பத்தினர்.

## ஆஸ்பத்திரிக்கு உள்ளகத் தொலைபேசி

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஏற்படுத்தப்பட்ட உள்ளகத் தொலைபேசி பரிவர்த்தனை கடந்த வியாழக்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது. (ஐ-173)

## ஆலயத்தில் திருட்டு

நள்ளிரவு வேளை ஆலயம் ஒன்றின் கதவுகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் ஆலயத்திலிருந்து பல பெறுமதி மிக்க பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு, கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலில் இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

ஆலயத்தின் சகல மண்டபங்களினதும் கதவுகளை உடைத்து ஆராய்ந்த இத்திருடர் குழு அங்கிருந்த பிள்ளையாரின் சுமார் 30 ஆயிரம் பெறுமதியான அங்கி (கவசம்) உட்பட பல பெறுமதிமிக்க பொருளகளைத் திருடியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-15)


### புழுவம்

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் சில கற்கை நெறிகளைப் பயில்வதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிப்போர் மேலதிகமாகத் தோற்றவேண்டிய தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் எம்மிடம் கிடைக்கும்.

முடிவு திகதி: 28.08.2004
BHARATHY PATHIPPAKAM,
430, K.K.S. ROAD, JAFFNA.


## தொழில்நுட்பக்கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கும் ஏனைய தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சை

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கும் ஏனைய தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வெளிநாடுகளில் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புத் தற்போது (யாழ். மாணவர்களுக்கு) கிட்டியுள்ளது.

கீழ்வரும் தொழில்துறைகளுக்கு வெளிநாட்டில் வேலையைப் பெற்றுக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை 20.08.2004 வெள்ளிக்கிழமை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.00 மணிவரை ஸ்ரீலங்கா தொழில் பயிற்சி அதிகாரசபையின் - வேலைவாய்ப்புப் பிரிவினரால் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தகுதியானவர்கள் உரிய கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**பதவிகள்:**

Carpenters, Fitters, Welders, Masons, Heavy Equipment Mechanics. Carpenter Supervisor, Plumber Supervisors and Experienced Plumbers, Experienced Electricians Supervisor Engineer, Quantity Survior, Civil Engineer, Civil Foremen and Operators for Excavator, Caterpillar, Crane, Folk Lift, Dozer, Heavy Equipment, Elevator, Trailer.

ஏற்பாடுகள்

N.Yogarajan,
PRINCIPAL,
Technical College,
Jaffna.

L.H.O. Abeyagunawardena,
Director (Job Placemene,
Career Guidance & Special Programe)
**VOCATIONAL TRAINING AUTHORITY OF SRI LANKA.**

(C/36703)(39-40-15-)

# பிறந்ததின நல்வாழ்த்துக்கள்




அளவெட்டி மத்தி, மழுவல் வளவைச் சேர்ந்தவர்களும்
தற்போது OVDENBOSCH HOLLANDஇல் வசிப்பவர்களுமான
திரு.திருமதி குகன் - மாலா தம்பதிகளின்
செல்வப் புதல்விகளான **தர்ஷாகினி** தனது ஆறாவது பிறந்ததினத்தையும் **கீர்த்தினி**
தனது முதலாவது பிறந்ததினத்தையும் இன்று (16.08.2004) திங்கட்கிழமை இணுவிலில்
இருக்கும் தமது மாமா பத்மநாதன் அவர்களின் இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இவர்களிருவரையும் அன்பு அம்மா, அப்பா மற்றும் அம்மம்மா இரத்தினேஸ்வரி, அப்பப்பா செல்லத்தம்பி, மாமா பத்மநாதன், மாமி தாரணி, மாமா துரைராஜா, அத்தை ஜெயமணி, மச்சான் குமரன், மச்சாள் சஜிதா, பெரியப்பா மாணிக்கவாசகர் (லண்டன்), பெரியம்மா புவனேஸ்வரி, தர்யன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அளவையூர் கும்பழாவளைப் பிள்ளையாரின் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

'தர்மியம்பதி'
வட்டுவினி, இணுவில் மேற்கு, இணுவில். (35199) (24-18-19)

- **திரு.பத்மநாதன்.**

## கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகள்

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. பங்குபற்றுபவர்கள் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் தமது ஆக்கங்களினை 15.09.2004 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரை: பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 700-800 சொற்களுக்குக் குறையாது எழுதப்படல் வேண்டும்.

1. கண்ணிவெடி நடவடிக்கைகளில் (Mine Action) ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்திற்கான பங்களிப்பு
2. எமது சமூகத்தில் கண்ணிவெடி அபாயக்கல்வியின் முக்கியத்துவம்.
3. கண்ணிவெடிகளற்ற எதிர்காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு

| பரிசு விவரம் | கட்டுரை |
|---|---|
| முதலாம் பரிசு | 6,500/= |
| இரண்டாம் பரிசு | 3,500/= |
| மூன்றாம் பரிசு | 2,500/= |
| இரு ஆறுதல் பரிசுகள் தலா | 750/= |

**சித்திரம்:**

"கண்ணிவெடிகளில் இருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்" எனும் கருப்பொருளினை வெளிப்படுத்தவேண்டும்.

| பரிசு விவரம் | |
|---|---|
| முதலாம் பரிசு | 7,500/= |
| இரண்டாம் பரிசு | 5,000/= |
| மூன்றாம் பரிசு | 3,000/= |
| இரு ஆறுதல் பரிசுகள் தலா | 750/= |

*போட்டி நிபந்தனைகள்:*

1. வெண்புறா நிறுவன ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
2. யாழ். மாவட்டத்தில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
3. கட்டுரை: கட்டுரை A4 தாளில் எழுதப்படவேண்டும். தாளில் ஒரு பக்கத்தினை மட்டுமே பயன்படுத்தவேண்டும். கட்டுரை தெளிவான கையெழுத்தில் இருத்தல்வேண்டும். தட்டச்சில் பொறித்தும் அனுப்பப்படலாம்.
4. சித்திரம்: கருப்பொருளினை வெளிப்படுத்தக்கூடிய சுலோகங்கள் பயன்படுத்தப்படவேண்டும். சுலோகங்கள் 4 இற்கு மேற்படாதவையாக அமைதல்வேண்டும். அளவுத்திட்டம் 18"x12" (Drawing Paper) என அமைய வேண்டும். சித்திரங்களும், சுலோகங்களும் புத்தாக்கமாக இருத்தல்வேண்டும். வர்ணபிரயோகம் – நீர்வர்ணம் மட்டும் பாவிக்கவேண்டும். கண்ணிவெடி, வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடிபொருள்கள் என்பவற்றைக் கையாளுதல் போன்ற சித்திரம் தவிர்க்கப்படவேண்டும் தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் கண்ணிவெடித் தகவல் பலகைக்கு (MRE bill board) பயன்படுத்தப்படும்.
5. பங்குபற்றுபவர்கள் தமது ஆக்கத்துடன் தமது பெயர், விலாசம், தொழில், தொலைபேசி இலக்கம், அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களினை தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
6. போட்டியின் முடிவு திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.
7. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, இறுதி முடிவுகள் பற்றிய விவரங்கள் பத்திரிகை மூலமாக அறிவிக்கப்படும். ஆக்கங்கள் நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பப்படலாம். மேலதிக விவரங்கள் தேவையாயின் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளலாம்.

**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்**
இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல.:021-222-5932

(35268)(34-40-15-16)

# தகுந்த சிகிச்சைகள் மூலம் உளநோயைக் குணமாக்கலாம்

**உளநோய் உள்ளவர்கள் எத்தகைய சிகிச்சைகளைப் பெறவேண்டும் என்பதையும், யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உள மருத்துவக் கிளினிக் பற்றியும் விளக்குகிறது இக்கட்டுரை.**

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே நோய்களும் தோன்றிவிட்டன. இவை உடல் நோய்களாகவும், உள நோய்களாகவும் உருவாகியுள்ளன. வாழ்க்கையில் கஷ்டங்களை அனுபவிக்கும்போது மக்கள் கவலைப்படுகிறார்கள், பயப்படுகிறார்கள், மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். இவை சிலரின் உடல் ரீதியான, உள ரீதியான அறிகுறிகளாக வெளிப்படுகின்றன. தலைவலி, கைகால், விறைப்பு, உடல் எரிவு என தலையில் ஆரம்பித்து கால்வரைக்குமான உடல் முழுவதும் ஏற்படும் உளரீதியான முறைப்பாடுகள், மெய்ப்பாட்டு முறைப்பாடுகள் (Somahizahion) எனப்படுகிறது.

உணவுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் பாலமான நரம்புகளின் பாதிப்பு மூளைக்குறைபாடுகளை உருவாக்கி சிந்திக்கும் ஆற்றலை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தன்மையை மாற்றுவதால் தோசமான, வளமான வாழ்க்கையை குறைத்துவிடுகின்றது.

உளநலக் கோளாறுகளே ஒரு மனிதனை ஒடுக்கிவிடும் பெரும் நோயாகும். சிலரில் தானாகவும், அநேகரில் புறக் காரணிகளாலும் ஏற்படுகின்றது.

பொதுவாக கிழிந்த அழுக்கு ஆடையுடன், சத்தமிட்டு அலைந்து திரிபவர்களையே மன நோயாளர்கள் எனக் கருதுகின்றோம். ஆனால், சிலரில் காணப்படும் சிறு மனக்குழப்பம், நித்திரைக் குறைபாடு, பயம், பதற்றம் போன்றனவும் மனநோய்களினுள் உட்படலாம்.

இவ்வாறான நோய்களின் அறிகுறிகள் தென்பட்டதும் நேரத்தோடு வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்வதால் சில கடுமையான மனநோய்களாக மாறுவதை தவிர்க்கலாம்.

ஒருவருக்குக் கடுமையான உளப்பிளவை நோய் (Schizophrenio) ஏற்படுமாயின் அது அவரைப் பராமரிக்கும் குடும்ப அங்கத்தவரின் மனங்களை மட்டுமல்லாது, முழுக்குடும்பத்தையுமே வெகுவாகப் பாதிக்கும். இவ்வாறான பிரச்சினைகள் சமூகத்தைப் பாதிக்கும் மது போதைப்பொருள் பாவனை போன்ற இன்னொரு பிரச்சினையாகவும் உருவெடுக்கலாம்.




சமூகத்தில் இந்நோய்கள் இனங்காணப்படுவது குறைவாகவும், இனங்காணப்பட்டவர்கள் சிகிச்சைபெற முயல்வதும் குறைவாகவும் உள்ளது.

இவர்களுக்கு சிகிச்சை செய்து சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கான வழிகள் அநேகமிருக்கும்போதும் அக்கறைகொள்வது குறைவாகவே உள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள மருத்துவக் கிளினிக்கில் (அறை இல:32) மன நோயாளருக்கான சிகிச்சையின்போது மருந்து மாத்திரைகள் மட்டுமல்லாது, உளவியல் ரீதியான சிகிச்சைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன.

உளவியல் சார்ந்த சிகிச்சைகளை சாந்திகம் உளநல சங்கம் போன்றவற்றின் உளநல சிகிச்சையாளர்கள் வழங்கி வருகின்றனர்.

உளவளத் துணையாளர்கள் (Counsellors) தொடர் பாடல் வழியாக மனதை வளம்படுத்தும் சிகிச்சைகளை சிறுவர்களுக்கு, குடும்பத்தினருக்கு குடிபோதையை விலக்குவோருக்கு வெவ்வேறு விதமாகவும் மூச்சுக்கஷ்டம், தசையிறுக்கம் போன்ற அறிகுறிகள உள்ளவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

உள மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளர்கள் தமது தேவைகளை இங்கு கடமையாற்றுவோரிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

பலவகையான மனநோயின் தாக்கத்தினால் பீடிக்கப்பட்ட சிறுவர்கள் ஆண்கள், பெண்கள், முதியவர்கள் கிளினிக்கிற்கு வரும் வேளை உறவினரும் வருவது நோயாளிக்கு உதவியாகவும் அவரைப் பராமரிப்பதற்கான வழிகளையும் அறியக்கூடியதாகவும் இருக்கும்.

சிலர் தமது நோயின் தீவிரம் குறைந்தவுடன் தாங்களாகவே மருந்துப்பாவனையை நிறுத்திவிடுகின்றனர். பின்னர் நோயின் அறிகுறிகள் தென்பட்டதும் மீண்டும் சிகிச்சைக்கு வருகின்றனர். மனநோய் மாத்திரைகள், தலையிடி மாத்திரைகள் (Panadol) போன்றவை அல்ல, அவற்றின் அளவினை கூட்டுவதோ, குறைப்பதோ அல்ல, நிறுத்துவதோ மருத்துவரின் ஆலோசனைப்படி என்பதை மனதில் பதிக்க வேண்டும்.

நோயாளர்களுக்கு மருந்துப்பாவனையில் சந்தேகமெழுந்தாலோ அல்லது அசௌகரியங்கள் ஏற்பட்டாலோ உடன் மருத்துவரை நாடுவது நலமாகும்.

நித்திரைக்குறைபாடு உள்ளோரில் சிலர் தூக்கம் வரவழைக்கும் நித்திரைக்குளிசைகளான வலியம் (Valium), லிபிறியம் (Librium) போன்ற மருந்துகளை தமது விருப்பப்படி (Selfmedication) பார்மசிகளில் வாங்கி பாவித்து பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

பராமரிப்பற்ற மனச்சோர்வு (Depression) நோயாளர்கள் தமது மாத்திரைகளையே அதிகம் உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட முயல்கின்றனர்.

தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு பிளைப்பவர்களும் உளநல சிகிச்சையைப் பெறுகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் வலுவான ஆலோசனை வாழ்வில் பயனுள்ள மாற்றுவழியை ஏற்படுத்துகின்றது.

மதுப்பாவனைக்குட்பட்ட (Alcoholism) நோயாளர்களுக்கான குழுச்சிகிச்சைகள் (Group the rapy) வியாழன்தோறும் இக்கிளினிக்கில் நடைபெறுகின்றது.

(வளரும்)

**டாக்டர் அ.பிறிற்றோ டக்ளஸ்,**
(உளநல சிகிச்சையாளர்),
**டாக்டர் செல்லையா சிறீதரன்**
(உள மருத்துவப் பிரிவு)
யாழ்.போதனாவைத்தியசாலை.

# விற்றமின் குறைவால் ஏற்படும் தாக்கங்கள்

### பிந்திய மரஸ்மஸ் (Late Marasmus)

குழந்தைகளுக்குச் சரியான அளவில், உரிய முறையில் புரதங்கள், விற்றமின்கள் உணவுடன் சேர்த்து வழங்கப்படாமைக்கு அக்குடும்ப வளப்பறறாக்குறையே காரணமாக அமைகிறது. இதனால பிந்திய மரஸ்மஸ் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டாகின்றது.

### இந்நோய்த் தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டால்...

★ சீரற்ற வளர்ச்சி
★ தேவையற்ற சதைவளர்ச்சி
★ குறைந்த நிறை
★ அடிக்கடி நோய்வாய்ப்படல்
★ இரத்தச் சோகை
★ அடிக்கடி வயிற்றோட்டம், நீண்டகாலத்திற்கு நீடித்தல்

இதனை நிவர்த்தி செய்வதற்கு வைத்திய ஆலோசனைப்படி உணவு வகைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதன் மூலம் நோயினை சீர்செய்துகொள்ள முடியும்.

### அயடீன்

இதுவும் மனித உடலுக்கு மிக முக்கியமானது. உடலில் உள்ள முக்கிய சுரப்பியாகிய தைரொக்சின் என்ற சுரப்பியினை சரியான முறையில் இயங்கவைக்க உதவுகின்றது. அத்துடன், அயடீன் சக்தியானது உடலை சீராகவும, மன உறுதியினை சீராகப் பேணுவதற்கும் மிக முக்கிய பங்கெடுக்கிறது.

★ உடலில் உள்ள தோல், மயிர்களை வளமாகப் பேணுகின்றது.
★ உடலுக்கு வழங்கப்படும் ஒட்சிசனைக் கட்டுப்படுத்துகின்றது.
★ உடல் வெப்பநிலையினை பேணுகின்றது.
★ உடல் மாப்பொருள் உறிஞ்சிக்கொள்ளும தன்மையினை கூட்டுகின்றது.

### விற்றமின்கள் (உயிர்ச்சத்துக்கள்)

இதில் பலவகையுண்டு, இருந்தும் மனித உடலுக்கு அவசியம் தேவைப்படும் சில விற்றமின்களின் தொழிற்பாடுகள் தரப்படுகின்றன. விற்றமின்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1) கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின்கள.
2) நீரில் கரையக்கூடிய விற்றமின்கள்.

### கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின்கள்

★ விற்றமின் A
★ விற்றமின் D
★ விற்றமின் E
★ விற்றமின் K

### நீரில் கரையக்கூடிய விற்றமின்கள்

★ விற்றமின் B
★ விற்றமின் C

இங்கு விற்றமின் தொழிற்பாடுகளை அதனைப் பெற்றுக்கொள்ளும் முறை, பற்றாக் குறையால் ஏற்படும் தாக்கம் பற்றியும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. ★

**செ.செல்வரட்ணம்,**
பதவிநிலைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

| விற்றமின் | தொழிற்பாடு | பெற்றுக்கொள்ளவேண்டிய உணவு | விற்றமின் குறைவால் ஏற்படும் தாக்கங்கள் |
|---|---|---|---|
| விற்றமின் A | கண்பார்வைச் சீராகப் பேணல், உதவியாக வியர்வைத் தொழிற்பாடு, உமிழ் நீர் சுரப்பி சுரத்தல் போன்றவற்றிற்கு உதவுதல். | பச்சை இலைவகைகள், கரட், மாம்பழம், பப்பாப்பழம், பால், கொட்லிவர் எண்ணை (Cod liver oil), மஞ்சள்நிறப் பழங்கள். முலைப்பால் குழந்தைகளுக்கு. | கண்பார்வைக்குறைவு, குருட்டுத் தன்மை |
| விற்றமின் D | சாதாரண எலும்பு வளர்ச்சி, தசைகளுக்கு வலுவூட்டல். | பால், முட்டை, பட்டர், முட்டைக்கோவா, எண்ணெய்ச்சத்துக் கூடிய மீன் வகைகள் மனிதத் தோலில் சூரிய ஒளி படும்போது உடலில் விற்றமின் D உற்பத்தியாகின்றது. | எலும்புகள் மென்மை அடைதல், குழந்தைகளுக்கு எலும்பு வளைதல் (Rickets), எலும்புகள் வலுவற்றுப் போதல (வயதானவர்களுக்கு) (Osteomalacia). |
| விற்றமின் K | உடலில் குருதிப்பெருக்கைக் கட்டுப்படுத்துகின்றது. | பச்சை இலைக்கறி வகைகள். | குருதி உறையா நோயை ஏற்படுத்துகின்றது. |
| விற்றமின் B (தயலின்) | உடலில் உள்ள மாப்பொருள்கள் பிரிகை அடைவதற்கும் உடல் நரம்புத் தொகுதிகள் சீராக வேலை செய்வதற்கும் | பால், கிழங்கு வகைகள், தவிட்டுடன் கலந்த அரிசி. | கை, கால்கள் விறைப்புத் தன்மை, இதய வருத்தம், ஓடிமா (Oedema). |
| விற்றமின் B6 | சாதாரண நடவடிக்கைக்கான அத்தியாவசிய அமினோ அமிலம் தாக்கத்திற்கும் எலும்பு மச்சைக்குள், அயன் உற்பத்தி செய்ய உதவுதல். | மரக்கறிவகைகள், ஈரல் | நாக்கில், வாயில் புண் தோன்றுதல், அயன் இரத்தசோகை நோய் (Iron deficiency anemia). |
| விற்றமின் B 12 | உடலில் DNA உற்பத்திக்கு உதவுதல், செங்குருதி துணிக்கை உற்பத்தியினை ஊக்குவித்தல். | இறைச்சி,முட்டை, பால், மீன். | மேக்கா லோபிளாஸ்ரிக் இரத்தச்சோகை (Megaloblastic anaemia) முள்ளந்தண்டு, நரம்புகள் உரியமுறையில் தொழிற்படாமல்போதல். |
| விற்றமின் C | குருதி மயிர்துளைக்குழாய் சுவர்களுக்கு வலுக்கொடுத்தல். செங்குருதி உற்பத்திக்கு உதவி செய்தல் எலும்புகள், பற்கள் வளத்தினை பேணுதல். | தோடம்பழம், பச்சை இலைக்கறி வகைகள், புளிப்புச் சுவையுடைய பழவகைகள். | முரசில் இருந்து இரத்தம் வடிதல், புண்கள் மாறத் தாமதம் அடைதல், பலவீனம், களைப்பு ஏற்படல். |
| விற்றமின் நியாசின் | உடலில் உள்ள மாப்பொருள்கள் கொழுப்பு வகைகள் தொகுப்பு மாற்றம் அடைய உதவுதல், சரியான முறையில் சமிபாடடைதல், நரம்புத் தொகுதிகள் சீராகத் தொழிற்பட உதவுதல். | தரைக்கீழ் கிழங்கு வகைகள், அரிசி, மீன் கோதுமைமா. | வயிற்றோட்டம், நரம்புகள் பழுதடைதல, முள்ளதண்டு மாற்றம் அடைதல், மனவளர்ச்சி ஏற்படல், விறைப்பு, இரத்தசோகை. |


**மேற்கூறப்பட்ட உணவுப் பழக்கங்களை நாம் நாளாந்தம உணவில் முறைப்படி சரியான அளவில் சேர்த்துக் கொள்வோமாயின் எந்தவிதமான நோயின் தாக்கத்திலிருந்தும் தப்பித்து உடல் ஆரோக்கியத்துடன் உயிர்வாழ முடியும்.**

# புற்றுநோய்க்கு மருந்தாகும் வெற்றிலைச்சாறு...

இரத்தப் புற்றுநோய்க் கலங்களை அழித்துவிடக் கூடிய அணு மூலக்கூறு ஒன்று வெற்றிலையில் இருப்பதை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கல்கத்தாவிலுள்ள இந்திய இரசாயன உயிரியல் நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வெற்றிலையில் உள்ள இந்தச் சக்திவாய்ந்த மூலக்கூறினை இனங்கண்டு அறிவித்துள்ளனர்.

ஆசிய நாடுகளில் நோய்களுக்கு வெற்றிலையின் சாறு ஒரு மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்படுவது சாதாரண விடயமாகும்.



இப்பொழுது மனித உடலில் அந்நியப் பொருள்களிடமிருந்து கலங்களைப் பாதுகாக்கும் சக்தி வெற்றிலைச் சாற்றில் உள்ளதா? என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளார்கள். இவ்வாராட்சியின்படி குருதிப்புற்றுநோய் விடயத்தில் வெற்றிலை மிக சக்திவாய்ந்த மருந்துப் பொருளாகச் செயற்பட முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சாமிர் பட்டாச்சாரியா தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனத்திலுள்ள மருத்துவ விஞ்ஞானிகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்து தருவித்த புற்றுநோய்க் கலங்கள் மீது வெற்றிலைச்சாற்றின் மூலக்கூறுகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சியின்போது இந்த மூலக்கூறானது இரத்தப் புற்றுநோய்க் கலங்கள் மீதும் முனைப்பான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் புற்றுநோயுடன் தொடர்பற்ற ஏனைய கலங்கள் மீதும்எதுவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையென்பது கண்டறியப்பட்டது.

ஆரம்ப ஆராய்ச்சிகள் வெற்றியளித்திருப்பதால் நோய்வாய்ப்பட்ட மனிதர்கள் மீது இம் மூலக்கூறினைப் பிரயோகித்துப் பரிசோதிக்கும் முயற்சி விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. (ப-8)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler, பேட்டுக் குஞ்சுகள் 16.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டிப் பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் முருகன் - சாவகச்சேரியிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34916)

அதிவிசேட Prima Broiler குஞ்சுகளும் (மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு 36/=) சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும 19-08-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 2867, 077 6090926, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன். றஞ்சீத், 517, ஸ்ரான்லி றோட், யாழ். (35150)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல் பிறந்த, பூரட்டாதி (2ஆம் பாதம்) நட்சத்திரம், 8இல் செவ்வாய், பாவக்கிரகம் கூடிய, படித்த, நற்பண்புள்ள மணமகளுக்கு தொழில் வாய்ப்புள்ள, நற்பண்புள்ள மணமகன் தேவை. விள.இல. 2435, மே/பா உதயன். (35262)

## IELTS

- Student Visa மூலம் UK, Canada, Australia சென்று பட்டதாரியாகுங்கள்.
- International English test (IELTS) இல் நல்ல result ஐ பெற்று European University கட்கு Apply பண்ணுங்கள்
- குறுகிய காலத்தில் Student Visa பெற்ற பலரின் பாராட்டைப் பெற்ற ஆசிரியர்.

**K.P.ARUN** B.Sc.Hons.M.Sc.
வெள்ளவத்தை & கொட்டகெனா. 0777-259823
(35215)(42-14-16-24)

## KINGSTON personal class services

A/L உயிரியல், கணிதபாடங்களுக்கும் O/L பாடங்களுக்குமான பிரத்தியேக வகுப்புக்கள் இளம் மாணவ சமுதாயத்தால் கற்பிக்கப்படுகின்றன.

பி.ப. 4.00இற்கு பின்னர் 077-6146336இனூடு தொடர்புகொள்ளலாம்.
(39-16-14-24) (35293)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda Chaly Hero Majestic Ankur உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: S.S.சங்கர், 316, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (35276)

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பகப்பிள்ளையார் ஒழுங்கையில் கணேசா சனசமூக நிலையத்துக்கு அண்மையில் 6½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு: திருமதி ப.சர்வேஸ்வரன், சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு.
T.P.: 0776 087538 (35296)


## வைத்தியசாலைக்கு நிதி ஒதுக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஓக.16

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்குத் தேவையான நிதியை இவ்வருட பரமுகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்துதருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் இவரை நேரில் சந்தித்த வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் இவ்வேண்டுகோளை விடுத்தனர்.(4-135)

## மாடு திருடியோர் மாட்டிக்கொண்டனர்

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த 18 ஆயிரம் ரூபா பெறுமதியான மாடு ஒன்றைத் திருடி இறைச்சியாக வெட்டி விற்பனை செய்ய முயன்றவேளையில், அதனைத் திருடியோர் வடமராட்சி சமூக மேம்பாட்டுக்குழுவினரால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி, கப்பூதுவைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான மாடே இவ்வாறு திருடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டது.

மாட்டை வெட்டியோர் அதன் இறைச்சியின் ஒரு பகுதியை வல்வெட்டிப் பகுதியில் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது. மீட்கப்பட்ட இறைச்சி முழுவதும் சமூக மேம்பாட்டுக் குழுவினரால் அழிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாகச் சமூக மேம்பாட்டுக் குழுவினரால் பிடிக்கப்பட்ட நால்வர் விசாரணை செய்யப்பட்டுவருகிறார்கள். (4-173)


## ஒப்பந்த அடிப்படையிலான மீள் நியமன விண்ணப்பம் கோரல் - 2005
### சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பிரிவு - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனத்தில் 2005ஆம் ஆண்டுக் காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர் / உதவி வைத்திய உத்தியோகத்தர்
3. மருந்தாளர்
4. ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
5. தாதிய உத்தியோகத்தர்
6. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்
7. ஊடகக் கதிர் படப்பிடிப்பாளர்
8. பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்
9. மருந்துக்கலவையாளர்

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 2004-08-30ஆம் திகதிக்கு முன்னர் *"சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சு.சே.மா.பி. ப.பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்குப் பின்வரும் ஆவணங்களின் 3 பிரதிகளுடன் விண்ணப்பிக்குபடி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1. ஓய்வூதியக் கொடைப்பத்திரம்
2. இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளப்படிநிலையில் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்
3. சமாதான நீதிவானின் நற்சான்றிதழ்
4. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கான சம்மதக்கடிதம்
5. தற்போதைய உடல், உள நிலைபற்றிய மருத்துவ உத்தியோகத்தரின் சான்றிதழ்
6. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
7. 60 வயதுக்கு உட்பட்டவரெனில் தனது ஓய்வூதியத்தை உறை நிலையில் வைப்பதற்கான சம்மதக்கடிதம்

**வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்**
மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-36791)(26-14-16-24)




# உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்


தங்கம் வென்ற மகிழ்ச்சியில் டுலி

## 28ஆவது ஒலிம்பிக்கின் முதல் தங்கத்தை சீனநாட்டு வீராங்கனை டுலி வென்றார்

எதென்ஸ்,ஒக.16

28ஆவது ஒலிம்பிக் போட்டியில் 22வயதாகும் சீன மாணவி டுலி முதல் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார். 10 மீற்றர் 'ஏர் ரைபிள்' துப்பாக்கி சுடுதல் போட்டியில் முதலிடம் பெற்றதன் மூலம் இப்பெருமையைப் பெற்றார் அவர்.

எதென்ஸில் சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது. அதுவே போட்டியின் முதல் போட்டியாகவும் அமைந்திருந்தது.

10 மீற்றர் துப்பாக்கிசுடும் போட்டி 8 சுற்றுகளைக் கொண்டது. இதன் இறுதிச்சுற்றில் சீன வீராங்கனை டுலி 502 புள்ளிகளைச் சேகரித்துத் தங்கப் பதகத்தைத் தட்டிச் சென்றார்.

ரஷ்ய வீராங்கனை கால்கினா (501.5 புள்ளிகள்) வெள்ளிப் பதக்கத்தையும் செக்.குடியரசின் குர்கோவா (501.1 புள்ளிகள்) வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

## 2ஆவது தங்கமும் சீனாவுக்கே

எதென்ஸ்,ஒக.16

எதென்ஸ் ஒலிம்பிக்கின் 2ஆவது தங்கப் பதக்கமும் சீனாவுக்கே சென்றது.

போட்டியின் முதல் நாளில் 10மீற்றர் 'ஏர் ரைபிள்' துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் சீன மாணவி டுலி முதல் தங்கத்தை வென்றார்.

அதைத் தொடர்ந்து ஆண்களுக்கான 10 மீற்றர் 'ஏர் பிஸ்டல்' போட்டியிலும் சீனாவுக்கே தங்கப்பதக்கம் கிடைத்தது.

சீனவீரர் வாங் யூபு 690புள்ளிகள் பெற்று இப்போட்டியில் தங்கம் வென்றார். 6ஆவது முறை ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 43வயதாகும் யூபு1992ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். 1996 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற போட்டிகளில் இவர் இருமுறைகளும் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

தற்போது இப்பிரிவில் ரஷ்யாவின் மிக்கைல நெஸ்துருவ் வெள்ளியும், ரஷ்யாவின் விளாதிமீர் இசகோவ் வெண்கலமும் வென்றார்.

## மலரும் நினைவுகள்

- வியெஸ்ரி -

1908 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிவரை பிரிட்டனின் லண்டன் நகரில் நான்காவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றன. இதில் இடம்பெற்ற 22 வகையான போட்டிகளில் 22 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 971 வீரர்களும் 37 வீராங்கனைகளும் பங்கெடுத்தனர். இம்முறையே பிரிட்டன் முதல் முதலில் பங்குபற்றியது.வின்சர் கோட்டையிலிருந்து ஆரம்பித்த மரதன் ஓட்டப்போட்டி 26 மைல்கள் 385 யார்கொண்ட தூரத்தைக் கடக்கும் போட்டியாக நடத்தப்பட்டது.

மரதன் போட்டிக்கான தூரமாக பின்னர் இதுவே நிர்ணயிக்கப்பட்டது.

1912 ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதிவரை சுவீடன் நாட்டின் 'ஸ்டாக்கோம்' நகரில் ஐந்தாவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது இதில் இடம்பெற்ற 14 வகையான போட்டிகளில் 28 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 359 வீரர்களும் 48 வீராங்கனைகளும் பங்குபற்றினர். இந்த முறை முதன் முதலில் நேரத்தைக் கணிப்பதற்காக மின்கடிகாரம் பயன்படுத்தும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆறாவது நவீன ஒலிம்பிக் போட்டிகளை 1916 ஆம் ஆண்டில் கிழக்கு ஜேர்மனியின் பெர்லின் நகரத்தில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் முதலாம் உலக யுத்தம் காரணமாக கடைசியில் போட்டி கைவிடப்பட்டது.

## நெதர்லாந்து முன்னேற்றம்

எதென்ஸ்,ஒக.16

எதென்ஸ் ஒலிம்பிக்கில் மகளிருக்கான ஹொக்கி தொடக்க ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை 6-2 என்ற கோல் கணக்கில் வென்றது நெதர்லாந்து.

சனிக்கிழமை நடைபெற்ற 'பி' பிரிவுக்கான இந்த லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து அணித் தலைவர் மிஜின்ஜே டான்னர்ஸ் அடுத்தடுத்து 3கோல்களை அடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

முதல் பாதியில் நெதர்லாந்து 5-1 என முன்னிலை பெற்றிருந்தது தென்னாபிரிக்கா சார்பாக 2 கோல்களையும் ஜென்னி வில்சன் அடித்தார்.

நடப்புச் சம்பியன் ஆஸ்திரேலியா, ஜேர்மனி, தென்கொரியா ஆகியன 'பி' பிரிவில் உள்ள மற்றைய அணிகள்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறும்.

## முதல் சாதனை


400 மீற்றர் நீச்சல் போட்டியில் அமெரிக்க மைக்கல் பெல்ப்ஸ் 4 நிமிடங்கள் 8-26 வினாடிகளில் பந்தயத் தூரத்தை நீந்திக் கடந்து புதிய உலகசாதனை படைத்தார். இதன்மூலம் இவர் தங்கம் வென்றார்.

## வெயிலுடன் போராட்டம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி மிகச் சிறப்பான முறையில் தொடங்கிவிட்டது.

202 நாடுகளைச் சேர்ந்த 10ஆயிரத்துக்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பதக்க வேட்கையுடன் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு உள்ள ஒரே பிரச்சினை வெயில்.

சாதாரணமாகக் கோடை காலத்தின்போது எதென்ஸிலிருந்து மக்கள் அருகில் உள்ள தீவுகளுக்குச் சுற்றுலா சென்று விடுவது வழக்கம்.

அந்த அளவுக்கு உள்நாட்டு மக்களாலேயே தாங்க முடியாத வெயிலைச் சமாளிக்கப் பல்வேறு வழிகளை வீரர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

எதென்ஸில் சாதாரணமாகக் கோடைகாலத்தில் 100 பாகை பரனைட் வெயில் இருக்குமாம். அடுத்த இரு வாரங்களில் சராசரியாக 104 பாகை வெயில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வெயிலைச் சமாளிக்க வீரர்களுக்குக் கிடைத்துள்ள புதிய வாய்ப்பு 'ஐஸ்' ஆடைகள்.

ஆராய்ச்சிகளின்படி போட்டி தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு இந்த 'ஐஸ்' ஆடைகளை அணிந்து கொண்டால் போட்டியின்போது உடல் வெப்ப நிலை உயருவது 20 சதவீதம் குறைகிறது.

பெரும்பாலான போட்டிகள் திறந்தவெளி மைதானங்களில் நடைபெறுவதால் அனைத்து வீர, வீராங்கனைகளுக்கும் இந்தப் பிரச்சினை உள்ளது.

நீச்சல் வளாகத்துக்கு மேற்கூரை கிடையாது என்பதால் நீர்நேரடி சூரிய வெப்பத்தால் சூடாகிவிடும். இதனால் உடல்நலம் பாதிக்கக்கூடும் என்று வீர, வீராங்கனைகள் அச்சப்படுகின்றனர்.

## சிலவரிச் செய்திகள்

★ மகளிர் ஹொக்கிப் போட்டியில் ஜேர்மனி 2:1 என்ற கோல்கணக்கில் ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்தது.

★ ஆண்கள் குத்துச்சண்டைப் போட்டியின் முதற் சுற்றில் உக்ரைனிடம் இந்தியா தோற்றது.

★ இறகுப் பந்தாட்டத்தில் இந்திய வீரரான தமிழகத்தைச் சேர்ந்த சரத்கமல் 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

★ ஊக்கமருந்துக் குற்றச்சாட்டுக்கு உள்ளான கொஸ்டஸ் ஹெரன்டறிஸ், கதரினா தனோ ஆகியோரை ஒலிம்பிக் அணியிலிருந்து மீளப்பெற்றது கிரேக்கம்.

## பளுதூக்கும் போட்டியில் துருக்கிக்குத் தங்கம்

எதென்ஸ்,ஒக.16

மகளிருக்கான பளுதூக்கும் போட்டியில் துருக்கிய வீராங்கனை விர்சன் தய்லின் தங்கப்பதக்கம் வென்றார். இவர் 210கிலோ எடை தூக்கி முதலிடம் பிடித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இந்தப் போட்டியில் 205 கிலோ எடை தூக்கி சீன வீராங்கனை லீ வெள்ளிப்பதக்கத்தையும், 200 கிலோ எடை தூக்கி தாய்லாந்தைச் சேர்ந்த ஆரி வெண்கலப்பக்கத்தையும் பெற்றனர்.

பதக்கம் வெல்வார் என்று எதிர்பாக்கப்பட்டவரான இந்தியாவின் குஞ்சராணி 190 கிலோ எடைதூக்கி 5ஆம் இடத்தையே பிடித்தார்.

## பதக்கப் பட்டியல் (சனிக்கிழமை நிலைவரம்)

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | |
|---|---|---|---|---|
| 01. சீனா | 4 | 1 | 1 | 6 |
| 02. ஆஸ்திரேலியா | 2 | 1 | 2 | 5 |
| 03. இத்தாலி | 2 | 0 | 0 | 2 |
| 03. ஜப்பான் | 2 | 0 | 0 | 2 |
| 05. அமெரிக்கா | 1 | 3 | 1 | 5 |
| 06. உக்ரைன் | 1 | 0 | 1 | 2 |
| 07. துருக்கி | 1 | 0 | 0 | 1 |
| 08. ரஷ்யா | 0 | 3 | 1 | 4 |
| 09. ஹங்கேரி | 0 | 1 | 1 | 2 |
| 10. பிரான்ஸ் | 0 | 1 | 0 | 1 |
| 10. பிரிட்டன் | 0 | 1 | 0 | 1 |
| 10. ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| 10. போர்த்துகல் | 0 | 1 | 0 | 1 |
| 14. ஆஜன்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| 14. பெல்ஜியம் | 0 | 0 | 1 | 1 |
| 14. செக்குடியரசு | 0 | 0 | 1 | 1 |
| 14. ஜேர்மனி | 0 | 0 | 1 | 1 |
| 14. கொரியா | 0 | 0 | 1 | 1 |
| 14. மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |
| 14. நெதர்லாந்து | 0 | 0 | 1 | 1 |
| 14. தாய்லாந்து | 0 | 0 | 1 | 1 |

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட...
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans

SHARP be sharp
5 வருட
உத்தரவாதத்துடன்
விற்பனைக்கு பிந்திய சேவை
89, ஸ்ரான்லி வீதி, யாழ்
021-222 5150

SONY
ஏக விநியோகஸ்தர்கள்:-
SIEDLES
No.11, Stanly Road, Jaffna

எப்பிரதேசத்திலும் அன்ரனா மூலம்
இயங்கக் கூடிய மொபி ரெல் இணைப்புக்கள்
IDD இணைப்புக்கள் 23000/=
பவர் செலூலர்
ட்ரேடிங் கம்பனி
இல.185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 2227070

கணனித்துறையில் நீங்கள்
ஓர் பட்டதாரியாக......
BTEC HND
"IIS என்றும் உங்கள் வளமான
எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831/021 222 6933

Castrol
YAMAHA
YAMAHA யமஹா பிளாஸா
298, K.K.S.Road, Jaffna, 021 4590 200

SIVAKANESAN
STORES
Wholesale & Retail Dealers in
Textiles
Specialist in
Wedding sarees
# 41, Grand Bazaar, Jaffna, Sri Lanka
TEL NO : 2222063

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது காரியாலய ஊழியர் திரு.ப.மனோகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**பூலோகசுந்தரம் பத்மநாதன்**

அவர்கள் 17.07.2004 காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்தியத் தொழிற்சங்கம்,
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை யாழ்ப்பாணம்.

(35302)(40-11-40)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 04 - 1930



மறைவு 17 - 07 - 2004

### திருமதி கதிரவேலு பாக்கியம்

அன்போடு எம்மை ஆதரித்த அன்புத் தெய்வமே!
இன்றோடு முப்பத்தொரு நாளானாலும் உமது நினைவு
எம் நெஞ்சத்தை விட்டு அகலவே அகலாது.

*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.*

இன்று (16.08.2004) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு. (35300)(39-11-40)

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்

மலர்வு 19 - 11 - 1939



உதிர்வு 14 - 08 - 2004

சைவநற்பணி சிவப்பணி செம்மல்

### கார்த்திகேசு சொக்கலிங்கம்

(சின்னாலடி, தங்கோடை - காரைநகர்)

வரம் கொடுத்தீர் உமை நினைப்பதற்கு
குணம் கொடுத்தீர் குலம் தழைப்பதற்கு
பலம் கொடுத்தீர் நாம் நினைப்பதற்கு
வளம் கொடுத்தீர் உம் சிறார்கட்கு
நலம் கொடுத்தீர் உம் மனையவளுக்கு
பெரிய வரம் நீர் எமக்கு
வழிகாட்டி இங்கு யார் எமக்கு
"வாடுகின்றோம் வருந்துகின்றோம்"

**அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் திருமதி சொ.சிவாம்பிகை அவர்களுக்கும் மற்றும் பிள்ளைகளான சுதாகரன், தனஞ்செயன், (போராளி நரேன்), சிற்சபேசன் (போராளி செந்தமிழன்), சிவேந்திரன் ஆகியோருக்கும் அவரது உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

*கிளிநொச்சி.* (35307)(43-40-11)

கிளிநொச்சி வாழும்
அன்பு நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை மார்க்கண்டர்

(சமாதான நீதிவான்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட அண்ணாமலை மார்க்கண்டர் (இளைப்பாறிய உத்தியோகத்தர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்கள நேற்று (15.08.2004) ஞாயிற்றுக்கிழமை சித்தன்கேணியில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் இந்திரா உதயசூரியன் (பிரதேச சபை ,வட்டுக்கோட்டை), பாமா கணேந்திரகுமாரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற தயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயசூரியன் (விலைமதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்), கணேந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும் யாழப்பாணக் கல்லூரி மாணவர்களான பிரசன்னா, கிரிசாந்தன், நிவேதா, மோகனா ஆகியோரின் அன்புப் பேரனும் Dr. செல்வராசா (U.K.), கமலாம்பிகை சுந்தரராசா (சித்தன்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கணேச வாசம்"*
*சித்தன்கேணி.* (35306)(26-11-40)

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டிக் கௌரவிப்பு

வடமராட்சி,ஓக.16

வல்வெட்டித்துறை நகரசபை உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழாவின்போது சபையில் நீண்டகாலம் பணியாற்றி இளைப்பாறிய செயலாளர்களான - ந.ஞானவேல், பெ.கனகசபாபதி ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இப்பரிசளிப்புவிழா செயலாளர் செ.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெற்றபோது பிரதமவிருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சித் உதவி ஆணையாளர் க.இராசையா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டி. சனசமூக நிலையங்களுக்கிடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகளில் வெற்றிபெற்றோர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-173)

## சாவகச்சேரி ஆதீனத்தில் ஆண்டுவிழா

சாவகச்சேரி,ஓக.16

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயத்தில் ஆதீனத்தின் 170 ஆவது ஆண்டு நிறைவுவிழா (1834-2004) எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு - சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை தேவாலய போதகர் அருட்திரு. துரைராஜசிங்கம் ஹென்றி - வசந்தகுமார் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் யாழ். அதீன பேராயர் அருட்திரு எஸ். ஜெபநேசனும் திருமதி விமலா ஜெபநேசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி செ.அம்பிகைபாகன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராசா, சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம், தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி-கச்சாய் விகோரியார் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. எஸ்.இரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (3-31)

## மாதர் சங்கங்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.16

நல்லூர் பிரதேசத்துக்குட்பட்ட மாதர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பெண்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-13)

## சலவையகத்தில் புடைவைகள் திருட்டு!

வலி.வடக்கு,ஓக.16

சலவைக் கடையின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள சலவைக் கடையில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சலவைக் கடையில் இருந்த சுத்தம் செய்யப்பட்ட மற்றும் சுத்தம் செய்யப்படவென வைக்கப்பட்டிருந்த உடுபுடைவைகளே திருடப்பட்டுள்ளன. இது குறித்துப் பொலீஸில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-4)

## வலி.கிழக்கில் உள்ளூராட்சி வார இறுதி விழா

அச்சுவேலி,ஓக.16

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரம் -2004 இறுதி நிகழ்வுகள் ஆவாரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நாளை செவ்வாய்கிழமை நடைபெறும்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை தலைமையில் நடைபெறும் விழாவில் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி து.விஜயலட்சுமி, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா, வலி.கிழக்குப் உதவிப் பிரதேச செயலர் திருமதி க.சாந்தசீலன் ஆகியோர் பிரதமவிருந் தினர்களாகக் கலந்துகொள்கின்றனர். (ஐ-11)


**பிரத்தியேக வகுப்பு**
மயிலணி - சிவன்கோயில் முன்,
மயிலணி, சுன்னாகம்.

**A/L DAY CLASS**
புவியியல்
ஆசிரியர்: N.S. சாங்கர்.
B.A. (Hons)Geog.
ஆரம்பம்:- 18.08.2004
(35311) (43) புதன்-9.00 a.m.


## பாசையூரில் கவின்கலை வகுப்புகள்

குருநகர்,ஓக.16

பாசையூர் அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் பாசையூரைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவ, மாணவியர்களுக்கான கவின்கலைகள் வகுப்புகள் பாசையூரில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றன. நடனம், சங்கீதம் போன்ற பாடங்கள் இங்கு பயிலுபவர்களுக்கு இலவசமாகப் போதிக்கப்படுகின்றன. இதற்கான நிதியுதவியைப் பிரான்சில் வாழும் பாசையூரைச் சேர்ந்த நலன்விரும்பிகள் வழங்கியுள்ளனர். (ஐ-51)

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி சுப்பிரமணியம்

(Retiard Land Officer L.O.)



வள்ளிமனை, மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் அவர்கள் (14.08.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - லக்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி கந்தையா வள்ளிப்பிள்ளையின் (குஞ்சம்மா), மருமகனும், Dr.வினோதா (யாழ்.போதனா வைத்தியசாலை), பிரபாகர் (கண்ணன், Oxford University), கவிதா (B.Com.,U.K.), கீதா (B.Com.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.அச்சுதன் (யாழ்.போதனா வைத்தியசாலை), யசோதா (Oxford University), சிவகுமார் (Ph.D.Cardiff University U.K.), ஜெயசீலன் (பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீததனன், பிரணவன், தட்சாயினி, சாரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சுப்பையா, செல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான திருமதி கனகசபை சின்னம்மா, திருமதி சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை, திருமதி சோமசுந்தரம் பொன்னம்மா, தர்மலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் திரு.திருமதி பசுபதி, திரு.திருமதி தியாகராஜா, திரு.திருமதி குலசேகரம், திரு.திருமதி செகராஜசேகரம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'வள்ளிமனை'*
*மீசாலை கிழக்கு, மீசாலை* (35304)(-11-40)

தகவல்:
Dr.P.அச்சுதன் (மருமகன்)

### அடைக்கலம் டேவிட்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், மெலிஞ்சிமுனை ஊர்காவற்றுறையை நிரந்தர வதிவிடமாகவும் இல.129A, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தியடியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட அடைக்கலம் டேவிட் நேற்று (15.08.2004) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அடைக்கலம் - பூரணம் ஆகியோரின் மூத்த புதல்வனும் பிலோமினாவின் (குமாரத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற இசிதோர் - பிரகாசியின் அன்பு மருமகனும், சேவியர், அரியராசா, கிறேஸ்மணி, பிறேமா, சாளேஸ், சின்ராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஞானமணி மற்றும் எலிசபெத்தம்மா, கீதம், ஆபிராம், பூபதி, மங்கை, பவளம், சின்னக்கிளி, ரதி, செல்லமணி ஆகியோரின் மைத்துனரும் ஜெயா, பாபு, பாலு (பிரான்ஸ்), தயா, கெனடி, ரேணு (கொழும்பு), சுவேந்திரன், கனி (கொழும்பு), சிறிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோண்பிள்ளை, ரேவதி, மதி, ஞானசேகரம், வதனி, சயானி, மெக்ஷி, அசோக் ஆகியோரின் மாமனாரும், கருணைநாதன் (மாவீரன் செந்தூரன்), அருள்நாதன் (லண்டன்), அலிஸ்ரன், செறில் (ஜேர்மனி), வீர்ஜினி, யோதினி, காலஞ்சென்ற றிசான், கஜன், றினுஜன், சிந்துஜா, காலஞ்சென்ற ஜக்ஷன், மருதர், றொபேட்சன், திலக்ஷன், லக்ஷன், எழில், வெனியஸ், தனுஸ்கா, கெமல்சன், சியானா, கெமஸ்ரா, அனேஜன், நெவின்சன், கிரியோன் ஆகியோரின அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.08.2004) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செலலப்பட்டு நாவாந்துறை பரலோகமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.129 A, மானிப்பாய் வீதி,*
*ஐந்துசந்தியடி, யாழ்ப்பாணம்.* (35304)(-11-40)

தகவல்:
யோண்பிள்ளை (சின்ராசா)
(மருமகன்)

### திருநாவுக்கரசு மகேஸ்வரன்

(முன்னாள் சுதா அச்சக உரிமையாளர், கல்வியங்காடு)



யாழ்ப்பாணம், ஏழாலையைப் பிறப்பிடாகவும திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மகேஸ்வரன் அவர்கள் 2004.08.14 ஆம் திகதி அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு -செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் வேல்ச்சந்திரன் (சுவிஸ்), சுதாகரன், சந்திரிகா, பிரதீபன், விஜயசாயி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகரெத்தினம் (சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நாகேஸ்வரி, நா.இசைஞானதேவி, கதிர்காமநாதன் (பிரான்ஸ்), விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராணி, நளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜா, கிருஷ்ணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (2004-08-16) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இல.267, மத்திய வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து திருகோணமலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.267, மத்திய வீதி,*
*திருகோணமலை.*
*T.P.: 026 - 222 7098.* (சி-36747)(26-11-40)

தகவல்:
குடும்பத்தினர்.

# தமிழ்த் தேசியத்தை எவராலும் சிதைத்து அழித்துவிட முடியாது

வலி.வடக்கு,ஓக.16

தமிழ்த்தேசியத்தை எவராலும் அழித்து விடமுடியாது. அதனை அழிக்கவோ அன்றி சிதைக்கவோ யாராவது முனைந்தால் அவர்கள் தாங்களாகவே அழிந்துபோவார்கள். அண்மையில் கொட்டாவலவில் இடம்பெற்ற சம்பவமும் இத்தகையதொரு சம்பவமே ஆகும்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் க.செழியன் குறிப்பிட்டார்.

நல்லூர்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மகாநாடு நாவலர் கலாசார மண்டபத்தில் பாலகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய செழியன்,

தலைவரும் சில போராளிகளும் மட்டும் எமது விடுதலையைப் பெற்றுத்தர முடியாது. ஆனால், தலைவரின் பின்னால் நீங்கள் மக்கள் சக்தியாக அணிதிரண்டு இருப்பதன் மூலம் இந்த விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வன்னியில் பெரும் இராணுவ நெருக்கடிக்கு நாம் உள்ளாகிய போது மக்கள் எல்லைப் படை, துணைப்படை, கிராமப்படையெனத் திரண்டார்கள். எதிரி அம்மண்ணில் இந்து சில மணித்தியாலங்களுக்குள் விரட்டியடிக்கப்பட்டான்.

இந்த விடுதலைப் போராட்டத்தை யாரும் கொச்சைப்படுத்த முடியாது. கொச்சைப்படுத்த விடவும் மாட்டோம். அப்படி யாராவது செய்ய முயன்றால் அவர்கள் தாங்களாகவே அழிந்து போவார்கள்.

அரசியல் பணிக்கென இங்கு மட்டுப்படுத்திய அளவில் குறைந்த எண்ணிக்கையான போராளிகளே பணியாற்றுகின்றோம். உங்களுக்குப் பின்னால் பெரும் அளவில் மக்கள் காணப்படுகின்றார்கள். இவைகள்தான் அரசாங்கத்திற்கும் படையினருக்கும் பெரும் தலையிடியாக இன்று இருக்கின்றது.

முன்னர் ஒரு காலகட்டத்தில் தமிழர்கள் யார் என்று தெரியாத நிலைமை காணப்பட்டது. அவர்களைப் பற்றி எள்ளி நகையாடப் பட்டது. இன்று தமிழர்கள் யார் என்பதைச் சர்வதேசமும் புரிந்துகொண்டுள்ளது. அரசின் காவல் படையினரே கூறுகின்றார்கள் உங்களுடைய பிரச்சினைகளை அவர்களிடம் கூறித் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று கூறும் அளவிற்கு இன்று நிலைமை மாறியுள்ளது.

தற்போது இம்மண்ணில் போர்க்கால ஜனநாயமே காணப்படுகின்றது. எமது நாடு விடுதலை பெற்ற பின்னர் இம் மண்ணில் யாரும் கட்சிகளை ஆரம்பிக்கலாம் ஜனநாயக ரீதியாகச் செயற்படலாம். தற்போது எதிரியானவன் எம்மைச் சுற்றி அழிவுக்கான கட்டமைப்புக்களையே உருவாக்குகின்றான்.

இவைகளையிட்டு நாம் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் இன்று எமக்கு ஓரளவு சாதகமாக அமைந்துள்ளது. இது பிராந்திய ரீதியான ஆதரவாகக் கூட அமைகின்றது. இதே போன்று சர்தேச மட்டத்திலும் எமக்கு ஆதரவு கிட்டிக்கொண்டு இருக்கின்றது. இத்தகைய நிலைமையில் எமக்கு வேண்டியது விடுதலை மட்டுமே. இதற்கு நாம் அனைவரும் ஒருமித்த குரலில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டியது அவசியமாகும் என்றார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், சிவமகாராசா, சூ.சிறில் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (ப-86)

# ஒற்றுமையான இனமாக இருந்து செயற்படுவோம்!

## செல்லக்கிளி நினைவுநாளில் பேச்சு

வலி.வடக்கு,ஓக.16

மாவீரர்களுக்கு நாம் துரோகம் இழைக்கக் கூடாது. அவர்களுக்கு நாம் செய்யவேண்டியது பலம்மிக்க ஒற்றுமையான இனமாக இருந்து எந்த நோக்கம், இலட்சியத்திற்காக மரணித்தார்களோ அதனை நாம் சென்றடையப் பாடுபடவேண்டும்.

தமிழ்க் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமரர் லெப். செல்லக்கிளியின் 21ஆவது ஆண்டு நினைவுநாள் கூட்டம் நல்லூர் இராஜதானியில் உள்ள திறந்தவெளியில் க.புலேந்திரராஜா தலைமையில் இடம்பெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

பதின்மூன்று படையினர் திருநெல்வேலியில் கொல்லப்பட்டபோது, பெரும் இனக் கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் கொன்றொழித்தும் பெண்களை மானபங்கப்படுத்தியும் சொத்துக்களைச் சூறையாடியும் வெறியாட்டம் ஆடினார்கள்.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் உயிரற்ற உடல்கள் இன்று தென்னிலங்கைக்குச் செல்லும்போது எதனையும் செய்யமுடியாத நிலைமையிலேயே இருக்கின்றார்கள். கடந்த 21 வருட காலத்தின் முன்னர் ஏற்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து இன்று தற்காலிகமான ஒரு சமாதான நிலைமை காணப்படுகின்றது.

எம்மிடையே என்றும் இறுக்கமான கட்டமைப்புடன் கூடிய உணர்வு இருக்கவேண்டும்.

ஆடிமாதம் என்பது தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒரு மாதம் ஆகும். திருநெல்வேலியில் இராணுவத் தொடர் அணி மீதான தாக்குதல், அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலைகள். சிறையில் குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்களின் கொலைகள் என இம்மாதம் தமிழர் வாழ்விலும் ஏன் சர்வதேச மட்டத்திலும் மறக்க முடியாத மாதமாக விளங்குகின்றது.

அதனால் இலங்கையில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாகக் கப்பலில் ஏற்றித் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிற்கு அனுப்பப்பட்ட தமிழ் இளைஞர்கள், தென்னிலங்கையில் இடம்பெற்ற கொடூர நிகழ்வுகளைக் கண்டு ஆயுதம் ஏந்தும் போராளிகளாக மாறி மாவீரர்களும் ஆகியுள்ளனர். இத்தகையவர்களுக்கு நாம் எக்காலகட்டத்திலும் துரோகம் இழைக்கக்கூடாது எனக் குறிப்பிட்டனர்.

சட்டத்தரணி என்.சிறிகாந்தா உரையாற்றும் போது:

எதிர்காலத்தில் இந்நாட்டில் சமாதானம் நிலைத்திருப்பது "அம்மையாரின் கைகளிலேயே தங்கியுள்ளது. கருணா போன்ற துரோகக்கும்பல்களுக்கு ஆதரவு வழங்குவதையும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுவதனைத் தவிர்ப்பதிலுமேயே சமாதானம் நிலைபெறமுடியும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் எச்சந்தர்ப்பத்திலும் போரைத் தொடங்கப் போவதில்லை என்றார். (ப-86)

# இறக்கும் போராளிகளின் கனவு இளைய சமுதாயத்தின் எதிர்காலமே!

யாழ்ப்பாணம்,ஓக.16

"ஒவ்வொரு போராளி இறக்கும் போதும் இன்றைய இளைய சமுதாயம் எதிர்காலத்தில் தூய சிந்தனையடைந்த சிறந்த சிற்பிகளாக வர வேண்டும் என்ற கனவோடுதான் இம்மண்ணிலே வித்தாகின்றார். இதுவே எங்கள் தேசியத்தலைவரினதும் விருப்பமாகும்".

- இவ்வாறு யாழ்.நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மாதாந்த பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் எழில் அன்பன் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு, அக்கடமியின் பிரதான மண்டபத்தில் இயக்குநரின் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாகச் சின்னத்துரை வேல்முருகன் தம்பதியினர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களை வழங்கினர்.

தொடர்ந்து உரையாற்றுகையில் எழில் அன்பன் கூறியதாவது:

பாடசாலை என்பது மாணவர்களைச் சகல துறைகளிலும் ஊக்குவித்து முன்னேற்றமடையச் செய்வதாக இருத்தல் வேண்டும். பாடசாலைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இன்று மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்ல வேண்டி உள்ளது. அநேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களைச் சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிகமாகக் கல்விச் செயற்பாடுகள் ஏற்படுத்தப்படுவதால் மாணவர்கள் மேலும் மேலும் கல்வியில் தேர்ச்சி பெறக்கூடியதாகவுள்ளது.




தற்போது நடைமுறையில் இருப்பது தற்காலிக சமாதானமே. அது நிரந்தரமானது அல்ல. இதனைப்பயன்படுத்தி மாணவர்களைத் தீய வழிகளில் இட்டுச் செல்ல முயற்சிகள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக மாணவர் மத்தியில் பல சமூக, கலாசாரசீரழிவுகள் ஏற்படுகின்றன. அவர்களின தூய்மையான சிந்தனை வேறு பாதைகளுக்குத் திசை திருப்பப்படுகின்றன. இவற்றைப் பெற்றோர்கள், மாணவர்கள் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும் என்றார். (ப)

## 'சுயம்' என்பதைத் தேடவேண்டுமானால்

# பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும்

யாழ்ப்பாணம்,ஓக.16

ஈழத்தமிழராகிய நாம் எமக்கெனச் 'சுயம்' என்ற ஒன்றைத் தேடவேண்டும் எனில், எமது பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பணிகள் பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும் எனப் பூகோள பேண் தகைமை வியாபகத்தின் அதிபர் அருளர் ஏ.ஆர்.அருட்பிரகாசம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கின் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை முதனிலைப்படுத்துதல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி திட்டம் தொடர்பான முன்மொழிவுகள், ஆலோசனைகள், கட்டுரைகள் மற்றும் ஆக்களைப் பரவலாகப் பெறவிருப்பதாக அறிவிக்கும் நோக்குடனேயே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அருளர் அருட்பிரகாசம் மேலும் தெரிவித்ததாவது:-

இத்திட்டத்தின் மூலம் .973ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பிரதேசம் இருந்ததைப் போன்ற ஒரு காலகட்டத்தை உருவாக்குவதைப் பின்னணியாகக் கொண்டுள்ளோம். இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண சபை, உலக வங்கி ஆகியவற்றுடனும், விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொண்டுள்ளோம்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராஜாவுடன் இணைந்து ஏற்கனவே இத்தகைய திட்டங்களை முன்வைத்திருந்தோம். ஆனால், அவை நிறைவேற்றப்படவில்லை. ஏற்கனவே முன்வைக்கப்பட்ட இத்தகைய திட்டங்களைத் தற்போதைய சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப நவீனமயப்படுத்தி நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகளை வழங்கும் வண்ணம் அறிஞர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

இத்திட்டம் தொடர்பான முன்மொழிவுகளை அடக்கியதாக 5 தொடக்கம் 7 பக்கங்களில் தமது ஆக்கங்களை முன்வைக்கலாம். இம்முன்மொழிவுகளை ஆராய்வதற்காக செம்ரெம்பரில் ஒரு குழு அமைக்கப்படும். இக்குழு அவற்றை ஆராய்ந்து படிப்படியாகத் திட்டங்களை மேற்கொள்வது பற்றித் தீர்மானிக்கவுள்ளது.

விவசாயம், மீன்பிடித்துறை, கைத்தொழில் நிறுவனங்கள், பொது உட்கட்டமைப்புத்துறை (வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றன) கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, சமூகப் பாதுகாப்புப் போன்ற பிரிவுகள் இத்திட்டதினுள் உள்ளடக்கப்படும். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும், மத்திய அரசு தவறான நோக்குடனேயோ அன்றித் தமிழ்மக்களின் நன்மை கருதியோ தற்போது பல திட்டங்களை முன்வைத்து வருகின்றது. அதற்கமைவாகவே அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் நடந்துகொள்ளும் நிலை காணப்படுகிறது. எனவே, இவற்றுக்கு எதிராக அன்றி அத்தகைய திட்டங்களை நாம் எமக்கு ஏற்றவிதத்தில் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்த ஒரு தமிழீழத்தை நாம் உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் தற்போது நடைமுறையிலுள்ள தொழில்சார் கல்வி தொடர்பான பாடத்திட்டங்களை மாற்றியமைக்கவேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை ஆக்கங்களாக வெளிப்படுத்த விரும்புபவர்கள் யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனுடன் தொடர்புகொள்ளலாம் எனவும் இதில் தெரிவிக்கப்பட்டது. (ப-201)

# தொலைக்காட்சிகளில் மூழ்கிக் கிடக்கும் நிலை மாறவேண்டும்

சுழிபுரம்,ஓக.16

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மக்கள் மூழ்கி இருக்கும்நிலை இன்று எங்கும் காணப்படுகின்றது. இந்த நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்படும் வரை நாம் நல்லவர்களை உருவாக்க முடியாது. எம்மத்தியில் வாழும் அறிஞர்களால் நல்ல நூல்கள் பலவும் இன்று வெளியிடப்பட்டு வருகின்றன. இவற்றை வாசித்து அறிவை விருத்திசெய்யாது தொலைக்காட்சி நாடகங்களை அதிக நேரம் பார்த்து வீண் செலவுசெய்கின்றார்கள் நம்மவர்கள். இந்த நிலையிலிருந்து மாறவேண்டும்.

- இவ்வாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் றெ.இருதயநாதன், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற மாறன் மணிக்கதைகள் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்தார். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் 49ஆவது ஒன்றுகூடல் நிகழ்வாக ச.பொ.கனகசபாதிபதியின் மாறன் மணிக்கதைகள் (சிறுவர் கதைகள்) வெளியீட்டுவிழா நடைபெற்றது. அருணோதயக் கல்லூரி அதிபர் கி.மகேந்திரராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

வாழ்த்துரை வழங்கிய சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா நூல் வெளியீடுகளுக்கு மக்கள் வழங்கும் ஆதரவு குறைவாக இருந்தாலும், இன்று பல நல்ல பயனுள்ள நூல்கள் வெளியாவது பாராட்டப்படத்தக்கதாகும்.

எமது சிறுவர்களுக்கு மாறன் மணிக்கதைகள் நல்ல நூலாக வெளியாவது பெரும் மகிழ்ச்சியாகும் என்று குறிப்பிட்டார்.

கலை இலக்கியக் களத்தலைவர் சைவப் புலவர் சு.செல்லத்துரை நூலை வெளியிட்டுப் பேசுகையில் ச.பொ. கனகசபாபதியின் அறிவு, ஆற்றல், வழிகாட்டல், தற்துணிவு யாவற்றையும் நான் நன்கு அறிந்தவன். அவரது திறமையின் கைவண்ணம்தான் மாறன் மணிக்கதைகளை வாசிக்கும்போது தெரிந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

த.சிவகுமாரன், விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகிய இருவரும் நூல் ஆய்வுரையை நிகழ்த்தினர்.

நூலாசிரியர் சார்பில் ஏற்புரையும் நன்றியுரையையும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார். (ப-28)

# 84 புதிய அதிபர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படும்

தேசிய பாடசாலைகளுக்கு செப்ரெம்பர் மாதம் நியமிக்கப்படவிருக்கும் 84 புதிய அதிபர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிப்பதற்குக் கல்வி அமைச்சுத் திட்டமிட்டு வருகின்றது.

விசேட புள்ளியிடும் முறையில் இந்த அதிபர்களை ஒருநேர்காணல் குழு ஏற்கனவே தெரிவு செய்துள்ளது.

ஒரு மாத காலம் அளிக்கப்படவிருக்கும் இந்தப் பயிற்சியின் போது, தலைமைத்துவம், முகாமைத்துவம், ஆக்கபூர்வமாகச் சிந்தித்தல், சிறப்பாகச் சேவையாற்றல் போன்ற விடயங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

கல்வி அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் மற்றும் கல்விச் சீர்திருத்தம் போன்றவற்றிலும் இந்த அதிபர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கின்றது. (ப)


ஈசன் கல்வி நிலையம்

A/L 2005 DAY CLASS
வர்த்தகப் பிரிவு

Eco.: K.உதயன்: Tue., Thu., 7.00 a.m.
Acc.: D.SAM: Mon., Wed., Fri. 7.00 a.m.
B.St.: B.பசில்: Mon., Tue., Wed, Thu., Fri. 8.30 a.m.

ஆரம்பம்:19.08.2004 THU.:7.00 a.m. (S.L.T)

## காணி விற்பனைக்கு

நாவற்குழியில் ஏ-9 வீதி அருகில் அரச களஞ்சியத்திற்கு எதிராக நன்னீர் வசதியுடன் கூடிய 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொழிற்சாலை, விடுதி, வீடு அமைப்பதற்கு ஏற்ற இடமாகும். விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

"The PENINSULA GROUP"
127/10, TEMPLE ROAD,
JAFFNA.
T.P.No: 021 - 222 - 3720.

(26-14-16) (35277)



உ
ஓம்சக்தி
மேல் மருவத்தூர்
ஆதி பராசக்தி பீடம்
கிராரனை, அல்வாய்

## 20ஆவது ஆண்டு நிறைவு விழா

17-08-2004 செவ்வாய்க்கிழமை

காலை 9.00 மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவு. தொடர்ந்து யாகம், பூசை, அன்னையின் படக்காட்சிகள் என்பன இடம்பெறும்.
ஆலயத்துக்குச் செல்லும் வழி:
யாழ்ப்பாணம், நெல்லியடி, திக்கம் வீதி, அல்வாய் மத்தி.
அனைவரும் வருக! அன்னையின் அருள் பெறுக!!

(35284) (26-14-16) - பீட நிர்வாகத்தினர்.

## 24 ஸ்ரீ 5123 இலக்க பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை 21-08-2004

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ., சங்கத்திற்குச் சொந்தமான 24ஸ்ரீ 5123 இல. (911 பென்ஸ்) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியை 16-08-2004 தொடக்கம் 21-08-2004 காலை 10.00 மணிவரை உபயகதிர்காமத்திலமைந்துள்ள வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவனத்தின் காரியாலய வளவில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 21-08-2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

01. மீளளிக்கும் பணமாக ரூபா 1000/- செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.
02. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று நாள்களுக்குள் முழுப் பணத்தினையும் செலுத்திப் பாரவூர்தியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச.,
மருதங்கேணி.
தாளையடி.
(சி-36742) (26-14-16)
பொ.ஸ்ரீராமச்சந்திரன்
பொதுமுகாமையாளர்.

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை: உத்தியோக உதவியாளர் தரம் - 03

தகைமைகள்:

I. க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம், 42/கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

II. ஆண், பெண் இருபாலாரும்

மாதாந்த ஊதியம்: $\frac{3,670 - 5,070}{70 \text{ X } 20} + 6,000$

அகவை எல்லை: 19 - 25 வருடங்கள்

02. பணிநிலை: பாதுகாப்பு உதவியாளர் தரம் - 03

தகைமைகள்:

I. 10ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

II. நல்ல உடல் வலுவும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

III. உயரம் 5' 5" இற்குக் குறையாமலும் நெஞ்சுச்சுற்று 32"இற்குக் குறையாமலும் இருத்தல்வேண்டும்.

IV. ஆண்பாலார் மட்டும்.

V. கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளுக்கான சான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் என்பவற்றைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாதாந்த ஊதியம்: $\frac{2,780 - 3,780}{50 \text{ X } 20} + 6,000$

அகவை எல்லை: 28 - 35 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை உத்தியோக உதவியாளர்" அல்லது "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை பாதுகாப்பு உதவியாளர்" எனக் குறிப்பிடப்பட்டு 2004/09/15ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல்வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

குறிப்பு: 01. முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.

02. நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ்.சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-36719) (26-14-16)

# யாழ். வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் யாழ். வர்த்தகக் கண்காட்சி-2004

## ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும் பங்கு பற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

(C/36735)

-யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

# 14ஆம் ஆண்டு நினைவலைகள்



## பரராஜசிங்கம் சுதன்

அவனியில் 25-06-1971

அவனடியில் 16-08-1990

வீதி செய்த சதியோ!
வீணர் எய்த குண்டுக்கு
இரையாகி ஒன்று இரண்டல்ல
ஆண்டுகள் பதினான்கு ஆயினும்
ஆறவில்லை எம் மனது.
அப்பாவைப் போல் பிள்ளையும்
தப்பாமல் கிடைத்ததென்று
மகிழ்ந்திருந்த வேளையிலே
அப்பா பின் மகனும் சேர்ந்து
அரனடி அடைந்தீரோ?

*உன் ஆத்மா சாந்தியடைய அனுதினமும்*
*ஆண்டவனை வேண்டிநிற்கும்.*

*15,ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

**அக்கம்மா, தம்பிமார்**
**மற்றும் உற்றார், உறவினர்.**

(C/36750) (22-17-18)

## யுவதியின் சடலம் மீட்பு

வவுனியா,ஓக.16

வவுனியாவில் உள்ள வன்னி இராணுவத் தலைமையகத்திறகு அருகே மூன்றுமுறிப்பு சமலன் குளகுறுக்கு வீதியில் இளம் பெண்ணின் சடலமொன்று நேற்று பற்றைக்குள் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் சமலன் குளத்தைச் சேர்ந்த இந்திரகௌரி (வயது 30) என அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் இவர் காணாமல் போயிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-13-164)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் சுந்தரம்பிள்ளை



(களபூமி - காரைநகர்)

காரைநகர் - களபூமியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், அத்தியடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சுந்தரம்பிள்ளை நேற்று (15.08.2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சுந்தரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியாரும் தெய்வேந்திரம் (லண்டன்), பரமசாமி (பராஸ்), சண்முகராசா (லண்டன்), செல்வநாயகி (ஜேர்மனி), தவமணி, மங்கையர்க்கரசி, மனோன்மணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியலட்சுமி, ரோகினி, செல்லத்துரை, இரத்தினசிங்கம், சண்முகலிங்கம், சந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ரமணன், ரஞ்சித், ரமேஷ், மைதிலி, ராதாகிருஷ்ணன், பவித்திரா, கார்த்திகா, அஜந்தன், சுதர்சன், ஜெயமோகன், கங்காதரன், தவநீதன், தவராசா, யோகசித்திரா, மயூரன், மஞ்சுபாஷினி, சுஜீவன், சுபோஷினி, தர்சினி, ஜனகன், ஜதீபன், கஜன், அனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2004) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்மார்:
தெய்வேந்திரம், பரமசாமி (பராஸ்),
சண்முகராசா (காரை).

*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

(35315)(40-43-18-17)

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 - 05 - 1923



விண்ணில் 16 - 08 - 1984

## அமரர் ச.சம்பந்தசரனாலயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த தந்தையே!
இருபதாண்டுகள் மறைந்தோடிப் போனாலும்
நினைவுகள் எம் நெஞ்சைவிட்டுப் போகவில்லை.

*அளவெட்டி.*
(35318)(43-17-18)

**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## வவுனியாவில் சிறுவன் மரணம்

வவுனியா, சுதந்திரபுரம் வீடமைப்புக் குடியேற்றத்திட்டத்தில் புல்டோசரினுள் சிக்கி நசியுண்டு விநாயகமூர்த்தி கிரிதரன் (வயது12) என்ற சிறுவன் உயிரிழந்தான்.

நேற்றுப் பிற்பகல் மேற்படி குடியேற்றத்தில் மேற்படி புலடோசர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போதே அதனுள் சிறுவன் அகப்பட்டு உயிரிழந்தான். (எ-13-164)

## முத்துலிங்கம் சண்முகலிங்கம்



தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் நியூசெம்மணி வீதி, கல்வியங்காடு மற்றும் கிளிநொச்சியில் வாழ்நத வருமான முத்துலிங்கம் சண்முகலிங்கம் 14.08.2004 சனிக்கிழமை கிளிநொச்சியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சந்திரமலரின் அருமைக் கணவரும் சர்மிளா (சுவிஸ்), ராஜினி, ஜனார்த்தன் (மலேசியா), பவானி, அஸ்வத்தன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரங்கநாதன் (சுவிஸ்), ரவிசங்கர் ஆகியோரின் மாமனாரும் மதுஷன், அபிஷா, முல்லைநிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் பரமேஸ்வரி, கணேசன், அமரர் திலகவதி, திருநாவுக்கரசு, பகவதி, சிவஞானம், சுவர்ணரத்தினம், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரசேஸ்வரன் (ஆசிரியர், யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை), யோகேஸ்வரன், செல்வனேஸ்வரன் (ஆரணி ஜுவல்லாஸ், கல்வியங்காடு), மகேந்திரகுமார் (லண்டன்), சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரின் இல்லத்தில் இருந்து இன்று (16.08.2004) திங்கட்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கிளிநொசசி, திருநகர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிளிநொச்சி.*
(35314)(43-13-18)

தகவல் :
கு.அரசேஸ்வரன்(ஆசிரியர்).

# காணவில்லை

மனநோயாளியான இராசையா சந்திரகலா 14.08.2004 அன்று அதிகாலை வீட்டிலிருந்து புறப்பட்டவர் இன்னும் வீடு வந்து சேரவில்லை. அவரின் தோற்றம் தலைமயிர் கட்டையாக வெட்டிய நிலையிலும் நாவல் நிறச் சட்டையும் மெல்லிய தோற்றமும் உடையவர்.

இவரைக்கண்டவர்கள் உடனடியாக கீழுள்ள விலாசத்திற்கு அல்லது T.P. NO.: 2263685, 0776589572 இலக்கத்திற்கு தயவு செய்து அறியத்தரவும்.

இ.சந்திரமோகன்.
குரும்பைகட்டி,
புலோலி வடமேற்கு.

(C/36751)(43-17-18)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கார்த்திகேசு சொக்கலிங்கம்

ஈழத்துச் சிதம்பரத்தை தன்னகத்தே கொண்ட
இலங்கிடும் காரைநகர், வலந்தலையில்
வாழ்வாங்கு வாழ்ந்த சொக்கலிங்கம்
வையகம் விட்டேகி சென்றதனால்
காலத்தால் இணைந்த எங்களின்
கண்ணீர் அஞ்சலிக் காணிக்கை.

ஐயப்பான் பக்தனாய் நாளும்
அவனியில் அன்புப் பணிகள் காத்தீர்கள்
ஐயங்கள் தீர்த்தெமக்கு அறிவுடன்
ஆறுதல் சொல்லி நின்றீர்கள்
வையகம் வாழ்த்திடும் சேவைகளால்
வாழ்வாங்கு எம்முடன் வாழ்ந்தீர்கள்
தெய்வீக நினைவுப் பொலிவுடன்
சேவை வல்லானாய் திகழ்ந்தீர்கள்

வன்னேரிக்குள ஐயப்பன் கோயிலில்
வாஞ்சையுடன் ஐந்து வருடங்கள்
எண்ணரிய தொண்டுகள் இயற்றியே
எல்லோர் மனதிலும் இடம்பிடித்தீர்கள்
பண்ணிசை பஜனை கோயில் பணிகளை
பாங்குடன் பேணி வந்தீர்கள்
விண்ணவர் உலகினில் நிங்களின்று
விரைந்திட்ட மாயம் தானென்னோ?

ஆங்கிலப் புலமையும் கல்வியறிவும்
அடைக்கலம் புகுந்திட்ட உத்தமர் நீங்களல்லவா
நீங்கிடாப் தெய்வீகப் பக்தியும்
நிறைந்து விளங்கிடும் பண்பாளர் நீங்களல்லவா
தீங்குகள் எண்ணாத தேசபக்தனாய்
தேசத்தை காத்திடும் வீரரைத் தந்த தியாக புருஷரல்லவா
ஏங்கிட வைத்தெம்மை பிரிந்து
எங்கு சென்றீர்கள் சொக்கலிங்கம் ஐயா!
ஐயப்பன் தாளில் ஐயா சேர்ந்து வாழ இறைஞ்சுகின்றோம்.

தங்களின் பிரிவினால் துயருறும்:

*சிவன் அருட்செல்வன் அரிசி ஆலை,*
*உரிமையாளரும் , ஊழியர்களும்*
*கரடிப்போக்கு, கிளிநொச்சி.*

*மணி ஐயப்பா நகைமாடம்.*
*முகாமையாளரும்,*
*ஊழியர்களும்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

(36752)(43-17-18)


## கடைகள் வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில்
பழைய பொலீஸ் நிலையத்திற்கு
முன்னால் இரு கடைகள்
வாடகைக்கு தனித்தும்
ஒருமித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு:
இ.தெய்வேந்திரம்பிள்ளை, நூலகம்
யாழ்.பல்கலைக்கழகம். (C/36749)

## N.C.A. கல்வி நிறுவனம்

சாரையடி, பருத்தித்துறை

**A/L 2005 DAY CLASS**

கலை, வர்த்தகம்

ஆரம்பம: 18-08-2004
அளவையியல் - பிரபானந்தன்
புதன் காலை- 6.30-7.30
தமிழ் - அகிலன்
புதன் காலை 7.30-8.30
இந்துநாகரிகம் - பிரதீபன்
8.30-9.30
பொருளியல் - அன்ரனி
9.30-10.30
வணிகக்கல்வி - உதயமோகன்
10.30-11.30
கணக்கீடு, கிறிஸ்தவம், புவியியல்,
நாடகமும் அரங்கியலும், ஆங்கிலம்
ஏனைய பாடங்களும் நடைபெறும்.
தனித்துவமான ஆசிரியர்களால்
பருத்தித்துறை மாணவர்களின்
நலன்கருதி N.C.A. நிறுவனத்தில்.

(35313)(43-17-18)


# மரண அறிவித்தல்

## செல்வி அஜந்தினி மயில்வாகனம்

மண்டைதீவு தெற்கு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வி அஜந்தினி மயில்வாகனம் அவர்கள் 14.08.2004 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மயில்வாகனம்-சுசிலாதேவியின் அன்பு மகளும் சுகந்தினி, நிரோஷன், கஜந்தினி, யதுஷன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லன்-வள்ளியம்மா, நடராசா-கோணேஸ்வரி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் மணிமாறனின் அன்பு மைத்துனியும் வேணுகனின் அன்புச் சித்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2004) திங்கட்கிழமை 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*6ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு தெற்கு,*
*மண்டைதீவு.*

(35310)(43-13-18)

தகவல்:
குடும்பத்தினர்.


ராஜா யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
கமலஹாசன், பிரபு, சிநேகா நடித்த
வசூல்ராஜா M.B.B.S
புதியநேரம்: 10.30,2.30, 6.30, 9.30
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல் சியாம், திரிஷா, மாதவன், விவேக் நடித்த
லேசா லேசா
காட்சிகள்: 11.00, 3.00, 7.00(பு.நே.)
வெள்ளி முதல அன்புச் சகோதரர்கள்

(C/36415) (12)

நிரஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், ரேவதி நடித்த
சுபாஷ்
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு. ROAD TRIP (இரவு 8.45 பு.நே.)


## நாகலிங்கம் சதாசிவம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், புகையிரதநிலையம்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சதாசிவம் நேற்று (15.08.2004) ஞாயிற்றுக்கிழமை அராலியில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சதானந்தன், சத்தியநாதன் (ஜேர்மனி), சதானந்தேஸ்வரி, காலஞ்சென்ற சத்தியானந்தன், சற்குணநாதன், சத்தியானந்தேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும் பவானி, கலா (ஜேர்மனி), நவரட்ணம் (இலங்கை மின்சார சபை, யாழ்), சாந்தினிதேவி (யாழ்.பல்கலைக்கழக பரீட்சை திணைக்களம்), நகுலேஸ்வரி (ஆசிரியை, யாழ். விக்கினேஸ்வரா), இராசதுரை ஆகியோரின் மாமனாரும் நிஷாந்தினி (கனடா), தமிழினி, கார்த்திகா, சஜீவ, பிரவீணா, சஸ்வீணா (ஜேர்மனி), செந்தூரன், பிரியந்தி (கனடா), பிரியதர்ஷினி, பிரஷாந்தன், அஞ்சலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2004) திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அராலி வடக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சே.நவரட்ணம்
(இலங்கை மின்சார சபை.யாழ்ப்பாணம் -மருமகன்)

*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.*

(35303)(35-13-18)

## திருமதி பொன்னையா தங்கம்மா

(சங்கானை)

குளத்தடி வீதி, சங்கானையை வசிப்பிடமாகக்கொண்ட பொன்னையா தங்கம்மா நேற்று (15-08-2004) ஞாயிறு பிற்பகல் 6.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசு-பொன்னையாவின் அருமை மனைவியும் பரராசசேகரம் (முன்னாள் திருமகள் லொறி உரிமையாளர், சங்கானை), செகராசசேகரம் (ஓய்வுபெற்ற வரி உத்தியோகத்தர்), இந்திராணி, சந்திரசேகரம் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்), தேவராணி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), பரராஜசிங்கம், (திருமகள் கொமினிக்கேசன், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோரஞ்சிதம், மகேஸ்வரி, ஞானசுந்தரம் (வவுனியா), மணிமேகலை, சந்திரகுமார் (ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர், கச்சேரி மன்னார்), பிரேமாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருபாரூபன் (வலி.மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்), சிவரூபி (ஆசிரியை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), தவரூபி (மாணவி, சங்கானை சிவப்பிரகாச ம.வி.), சுகிர்தா, சுகந்தன், வரதலொஜி (வவுனியா), பிரேமலொஜி (JSAC யாழ்ப்பாணம்), பாலஹாசன், (திருமகள் கொமினிக்கேசன், சங்கானை) சஞ்ஷியா (சித்த ஆயுர்வேதம், 4ஆம் வருடம்), சுரேஷியா (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கமலகாந்த் (வலி.தென்மேற்கு பிரதேசசபை, பண்டத்தரிப்பு பொறுப்பதிகாரி), சகிலா (நுண்கலைப்பீடம், மருதனார்மடம், 2ஆம் வருடம் நடனம்), திலீப்காநத் (யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்-உயர்தரம் -உயிரியல்), விசாகிதன், சுதேஷ்குமார் (கணக்காளர், நிக்கொட் நிறுவனம், யாழ்ப்பாணம்),சிவராசா (ஆதி மெடிக்கல், வெளிக்குளம், வவுனியா), ரஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-08-2004) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ.பரராசசிங்கம்
(திருமகள் கொமினிக்கேசன-மகன்),
சங்கானை.

*குளத்தடி வீதி,*
*சங்கானை.*

*(C/36753)(43-17-18)*

# இலங்கை வெற்றி

கொழும்பு,ஓக.16

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கொழும்பு, எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 313 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன்படி 2ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற ரீதியில் கைப்பற்றியது இலங்கை அணி.

நேற்று தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி சமிந்தவாஸின் துல்லியமான பந்துவீச்சால் 179 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை 313 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தின் ஆட்ட நாயகனாக குமார் சங்ககாரவும், தொடரின் நாயகனாக சமிந்தவாஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

## தமிழ்ப்பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை தொடர்பான கருத்தரங்கு கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பு பிளாஸா ஹோட்டலில் நடைபெற்றது.

கட்டடத் தேவைகளுக்கான மணலுக்குரிய மாற்றீடு, கொங்கிறீட் வீதி அமைத்தல் ஆகிய விடயங்களுக்காக இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கருத்தரங்கில் பங்குபற்றினார்.

இக்கருத்தரங்கிற்கு அழைப்புகள் பெற்ற தன் பேரில் கலந்துகொள்ளச் சென்றவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண் பொறியியலாளரும் திருகோணமலையில் கடமை புரியும் இன்னொரு தமிழ்ப் பெண் பொறியியலாளரும் அடங்குவர்.

கருத்தரங்கு ஆரம்பிப்பதற்கு முன்பதாக கலந்துகொள்ளச் சென்ற விருந்தினர்கள், மண்டபத்தினுள் தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

இந்த இரு தமிழ்ப் பெண் பொறியியலாளர்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அருகருகே அமர்ந்துகொண்டனர்.

பிரதமரின் வருகைக்கு சில வினாடிகள் இருக்கையில் பிரதமரின் பாதுகாப்புக்கென வந்திருந்த பெண் பொலீஸ் அதிகாரி ஒருவர் மண்டபத்திற்குள் வந்து இந்த இரு பெண் பொறியியலாளர்களையும் மண்டபத்திற்கு வெளியே அழைத்துச்சென்று ஒரு ஒதுக்குப்புறமொன்றில் அவர்களது கைப்பைகள், அடையாள அட்டைகள் போன்றவற்றைத் துருவித் துருவி சோதனையிட்டனர்.

சோதனை முடிந்தபின் பொலீஸ் அதிகாரி மீண்டும் இந்தப் பொறியியலாளர்களை மண்டபத்திற்குள் அழைத்து வந்தார். ஆனால் அவர்களை ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமரவிடாது ஒதுக்குப்புறமாக உள்ள இருக்கைகளில் அமரவிடப்பட்டனர். கூடவே பொலீஸார் இருந்து இரு பெண் பொறியியலாளர்களையும் நோட்டம் விட்டுக்கொண்டு இருந்தனர் என்று கூறப்படுகிறது.

கருத்தரங்கின் ஆரம்ப வைபவம் முடிவடைந்து பிரதமர் சென்ற பின்னரே தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமருவதற்கு இரு பொறியியலாளர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

பொலீஸாரின் இந்த அத்துமீறிய நடவடிக்கையினால் கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்ற ஏனைய பொறியியலாளர்கள் அதிருப்தியும் விசனமும் அடைந்தனர். (ஐ)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோடு தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

எனினும் ஒரு வங்கிக் கணக்கை அல்ல ஒரு வங்கியையே திறக்கக்கூடிய பணம் அவரிடம் உள்ளது என்ற தகவலையும் இக்பால் அத்தாஸ் வெளியிட்டிருக்கின்றார்.

தமது ஆதரவாளர்கள் கிழக்கிலங்கையில் வேட்டையாடப்படும் நிலையில் தமது புதிய இடத்தில் மனைவி பிள்ளைகளுடன் கூடியிருந்து கைத்தொலைபெசி மூலம் தனது பழைய தொடர்புகளுடன் பழையவற்றை மீட்டு உரையாடுவதைத் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இல்லை என்ற சாரப்படவும் அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலை அடுத்து கொழும்பிற்கு தப்பி ஓடிவந்த கருணா சில தினங்களுக்குப் பின்னர் இராணுவத்தின் பாதுகாப்பிற்குள் இருக்கவேண்டியவரானார் என்ற தகவலையும் சுமார் 14வாரங்கள் அவர் அவ்வாறு இருந்தார் என்ற உண்மையையும் அத்தாஸ் அவிழ்த்து விட்டிருக்கின்றார்.

கருணா விவகாரத்தை சரியாகக் கையாண்டு உரிய தந்திரோபாய உத்திகளை வகுத்து அவரைப் பயன்படுத்துவதற்கு இலங்கை அரச படைகள் தரப்பிலும் அரசியல் தலைமைத்துவத்திலும் சரியான வழிகாட்டல் இல்லாமல் போனதால் கருணா விவகாரம் அரசுதரப்பிற்கே எவ்வாறு பின்னுதைப்பாக மாறியது என்பதை அத்தாஸ் தமது கட்டுரையில் விலாவரியாக விவரித்திருக்கின்றார்.

கருணா விவகாரம் சரியாகக் கவனிக்கப்படாமல் அது பிழைத்துப்போனதால் அரசுத்தரப்பு அவரைக் கைவிடவேண்டியதாயிற்று.

அரசுத்தரப்பை நம்பி களத்தில் இறங்கிய அவரும் மிகுந்த ஏமாற்றத்தோடு வெளியேற வேண்டியவரானார்.

இந்த விவகாரத்தை சரிவரக் கையாள அரசுத்தரப்பு தவறியதால் இரண்டு பக்கத்தால் இடி வேண்டவேண்டிய நிலை அரசுத்தரப்புக்கு.

கருணாவைப் பாதுகாத்து ஊக்கப்படுத்தியதற்காக அரசுத் தரப்பு மீது புலிகளுக்கு எரிச்சல், கோபம்.

தன்னை கயிறு கொடுத்து ஏமாற்றியதற்காக அரசுத் தரப்பு மீது கருணாவுக்கு ஆத்திரம், சீற்றம்.

கருணா அண்மையில் 'ஏஸியன் ட்ரிபியூன்' மூலம் வழங்கிய பேட்டியில் இலங்கை அரசையும் அரசுப்படைகளையும் மிக மோசமாகத் தாக்கி கருத்து வெளியிட்டிருந்தார் என இக்பால் அத்தாஸ் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கருணாவின் பேச்சாளராகச் செயற்பட்ட வரதன் கருணாவைக் கைவிட்டு சிங்கப்பூர் வழியாகத் தப்பிச்சென்றமை பற்றிய தகவலும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

கருணா இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்து வெளியேறி வெளிநாட்டுக்கு சென்றுவிட்ட நிலையில் இலங்கையில் ஒரு கட்டமைப்பைச் செயற்படுத்தக்கூடிய நிலை ஏதும் அவருக்கு இல்லை என்றும் -

எனினும் அவருடன் சேர்ந்து இயக்கத்தை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட அவரது சகாகள் சிலர் ஆங்காங்கே ஒளிந்திருந்து சிறுசிறு வன்முறைகளிலும் கொலை, கொள்ளை போன்றவற்றிலும் ஈடுபடுவதற்கு வாய்ப்புண்டு என்றும் விவரம் தெரிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (க)

# இந்திய சுதந்திரதின நிகழ்வில் குண்டு வெடிப்பு; 18 பேர் பலி!

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலமான அஸாமில் நேற்றுக் காலை 10 மணியளவில் (இலங்கை நேரப்படி) பாரிய குண்டு ஒன்று வெடித்ததில் குறைந்தது 18பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்தனர்.

சுதந்திர தினத்தைக் கொண்டாடும் முகமாக இடம்பெற்ற அணிவகுப்பின் போதே இந்தக் குண்டு வெடித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் அநேகர் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்ட பாடசாலை சிறார்களே என்று பொலீஸ் தரப்பில் பேசவல்ல அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குவாகதி நகரின் 460 கிலோ மீற்றர் கிழக்கே அமைந்துள்ள கெமாஜி என்ற பிரதேசத்திலேயே இந்த குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அஸாமில் இயங்கும் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பிரிவினைவாத அமைப்பினரே இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (க)

## சுதுமலைவாசி உயிரிழப்பு!

கனடா, மொன்றியலில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த கார் விபத்து ஒன்றில் சுதுமலை வடக்கு வாசியான வைத்திலிங்கம் சுவேந்திரன் (வயது 35) என்பவரே உயிரிழந்தார்.

இவர் பயணம் செய்த வாகனம் வேறொரு வாகனத்துக்கு இடம் கொடுத்த சமயம் மின்கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது எனத் தகவல்கள் தெரிவித்தன.இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்தனர். (எ-3-139)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சுற்றிவளைத்து தடுத்துவைத்தனர்.

இதனை அறிந்த விடுதலைப் புலிகளின் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் அங்கு சென்று படையினருடன் கலந்துரையாடினார்.

சம்பந்தப்பட்ட போராளிகளிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. எனவே அவர்களைச் சோதனை செய்யவேண்டும் என்று படையினர் எழிலனிடம் தெரிவித்தனர்.

அவர்களிடம் ஆயுதங்கள் ஏதும் இல்லை அவாகள் அரசியல் பணிக்காகவே செல்கின்றனர். வீணான குற்றச்சாட்டைத் தெரிவித்து எமது அரசியல் பணிகளைக் குழப்பவேண்டாம் என்று எழிலன் படையினரிடம் எடுத்துக் கூறினார்.

பெண் போராளிகள் அணிந்திருக்கும் இடுப்புப் பட்டி ஓர் இராணுவ சாதனம். அது யுத்த நிறுத்த மீறல் என்றும் படையினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக ஏற்கனவே பேசி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி அவர்கள் கறுப்புப்பட்டி அணியலாம் என்று எழிலன் படையினருக்கு விளக்கமளித்தார்.

ஒருவாறு படையினர் அங்கிருந்து வெளியேறினர். படையினர் சென்ற பின் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் அங்கு வந்தனர். தமது அரசியல் நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்கத்துடன் படையினரின் செயற்பாடுகள் அமைகின்றன. இது யுத்தநியுத்த உடன்பாட்டை மீறும் செயல் என்று எழிலன் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டார். (எ-3-188)

## கீரிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை பஸ்களிலும் பக்தர்கள் கீரிமலையில் கூடினர்.

சோதனை நிலையங்களில் உடற்சோதனைகளை மட்டுமே படையினர் மேற்கொண்டனர். ஆள் அடையாளம் மற்றும் பொதிகள் சோதனைகள் இடம்பெறவில்லை.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பக்தர்கள் கீரிமலையில் கூடி இருந்ததை அவதானிக்க முடிந்தது.

கீரிமலைக் கடலில் நூறு மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் நீராட அனுமதிக்கப்பட்டனர். கடற்கரையில் இருந்து ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் கடற்படையினரின் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தன.

இதற்கிடையில், யாழ். வில்லூன்றி, சுழிபுரம் திருவடிநிலை, காரைநகர் கசூரினா, வேலணை சாட்டி கடற்கரை ஆகியவற்றிலும் நேற்றுப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் புனித கைங்கரியங்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-3-86)


## மது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் விசேட பூசைகள் இடம்பெற்று திருச்சொரூபம் வலம் வந்தது. இந்த நிகழ்வில் சுமார் மூன்று லட்சத்திற்கு அதிகமான பொது மக்கள் நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்து கலந்துகொண்டனர். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், வினோநோதராதலிங்கம், மன்னார், முல்லைத்தீவு அரச அதிபர்கள், சிங்கப்பூர் நாட்டின் இலங்கைக்கான தூதுவர், கிறிஸ்தவ மதவிவகார அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். இதே வேளை, மது விற்பனைக்காக வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு மன்னார் மாவட்ட தமிழீழ காவல் பணிமனையின் நீதியாளர் [illegible]ரன் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டு 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் 50 இற்கும் மேற்பட்டோர் பிற்பொக்கட், நகைகள் களவு எடுத்தமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு இருப்பதாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் உற்சவகால காவல் பணிமனை பொறுப்பாளர் சி.ராஜகோபால் தெரிவித்தார். (3-164)


சிறப்புப் பெறுபேற்று மாணவர்களுக்கு வாழ்த்துக்களுடன்...
DAY CLASS
கணக்கீடு
By: வின்சன் (B.B.A HRM SPL)
ஆரம்பம்: 16.08.2004 (திங்கள் 8 a.m.)
வினைல்ஸ் கல்வி நிலையம்
K.K.S. Road, சுன்னாகம்.
(C-38732)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களே!
நீங்களும் aat கற்கை நெறியை
தமிழ் மொழியில் கற்றிட அரியதொரு வாய்ப்பு


100% FREE
19.08.2004 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும்மாணவர்களுக்கு
விரிவுரைக் கட்டணத்தில் 100% கழிவு வழங்கப்படும்
தொடர்புகளுக்கு: IPAS
199, பிரதான வீதி,
(பிறிமியர் பேக்கரி மேல்மாடி) யாழ்ப்பாணம்.
TEL: 0777- 563294
Chartered Accountancy Fundation January 2005 க்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன.
22.08.2004 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விரிவுரைக் கட்டணத்தில் 50% விசேட கழிவு வழங்கப்படும்.

NIRU TUITION CENTRE
Kondavil
BIOLOGY
A/L 2006
ஆரம்பம்: 18-08-2004 புதன் 5.30 p.m.
திரு.V.தற்பரன் (35316)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
மீள் பரீட்சார்த்திகளுக்கானது.
உயிரியல்
திரு.கொங்காதரன்
பிரயோக உயிரியல்
(நீர்வளர்ப்பு)
இன்று ஆரம்பம்: 16-08-2004
திங்கள் 3-4 p.m.
(35292)

BRIGHTEN கல்வி நிலையம்
சங்கத்தானை
2005 A/L DAY CLASS
ஆரம்பமாகிவிட்டன
Ec. திரு.உதயன் திங்., செவ். ⇨ 3.30-5.30
B.st. திரு.முரளி செவ்., வியாழ. ⇨ 5.30.-7.00
Acc. திரு.சயந்தன் திங். ⇨ 5.30-7.00
Ta. திரு.நடா புதன் ⇨ 4.30-6.30
Ta. திரு.பவனந்தி வியா. ⇨ 4.30-5.30
Hc. திரு.ஜோதீஸ்வரன் சனி, ஞாயிறு ⇨ 4.00-5.00
Geo. திரு. குமரன் புதன், வியா. ⇨ 3.00-4.30
Lg. திரு.நவம், சுரேஸ் (35298)
வகுப்புகள் யாவும் புதிய நேரப்படி

மொடேன் கல்வி நிலையம்
நெல்லியடி ——— பருத்தித்துறை
A/L 2005 DAY CLASS
Acc. திரு.பவான் Wed. ⇨ 7.00
B.St. திரு.முரளி Wed. ⇨ 4.30 பருத். 5.30
Eco. திரு.சுதாகரன் Thu. ⇨ 3.30
பருத்தித்துறை சனி 11.30, செவ., வியா. 8.30
Hc. திரு.ஜோதீஸ்வரன் Wed. ⇨ 3.30
Ta. திரு.நடா } நேர சூசியை
Lo. சுரேஷ் } அலுவலகத்தில் பெறவும்
Geo. திரு.சிவகுமார் Tue ⇨ 8.30
St. திரு. ஜெகன்
Dra. திரு. கனகேஸ்வரன்
குறிப்பு: பாடங்கள் யாவும் புதிய நேரப்படி நடைபெறும்.
(35297)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமசாமி சண்முகவடிவு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியை சொந்த இடமாகவும் டச்சு வீதி, சேச் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சண்முகவடிவு நேற்று (15-08-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி (செட்டியார்)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகலட்சுமி மற்றும் சீதாலட்சுமி, சரஸ்வதி, விஜயலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சோமு மற்றும் சண்முகம், கணேஸ், குமாரசாமி, மோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் அழகன்-விஜயா, கணேஸ்-மீனா, கோவிந்தன்-பாமினி, ஜெயா-கந்தசாமி, சுஜா, சதீஸ், சுரேஸ், நந்தினி, பிரியா, தாசன், கபில், சரவணன், ரூபி, நிருபன், கீர்த்திகா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விசாகன், கௌசிகன், செந்தூரன், சத்தியன், கார்த்திகா, சஞ்சீவன், தாசிகா, சாதுஜன், கினோஜ்கன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-08-2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு றோட்,
சேச் லேன், சாவகச்சேரி. (35321)

தகவல்:
குடும்பத்தினர். (18-17-32)

## வைத்திலிங்கம் சுவேந்திரன் (இந்திரன்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் சுவேந்திரன் (இந்திரன்) அவர்கள் 14-08-2004 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் மற்றும் இராசமலர் (இளைப்பாறிய குடும்ப நல உத்தியோகத்தர், மானிப்பாய் கிறின்மெமோறியல் வைத்தியசாலை) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் சுயாதா, சுஜீபா ஆகியோரின் சகோதரனும் ஜெஸ்மினின் பெரிய தந்தையும் வைஷ்ணவனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'மிதிலை இல்லம்',
சுதுமலை வடக்கு,மானிப்பாய். (சி-36754)

தகவல்:
வை.இராசமலர் (தாய்). (18-17-32)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (ப்றைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.